உ

கணபதி துணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—(திருக்குறள்)

தொகுதி ௧௦. Vol—X.	காளயுக்தி௵ கார்த்திகைமீ DECEMBER 1918.	பகுதி ௧௧. No. 11.

சிவாஜி மஹாராஜன் சரித்திரம்.

இந்தியதேசத்தில் பெருந்தன்மையுடன் அரசாண்டு குடிகளால் மிகவும் கருதப்பெற்றவராகிய மஹா பெரிய அக்பர் என்று பெயருடைய மொகலாய வமிசத்து அரசருடைய அரசாட்சி முடிந்திருந்தது. அவரது குமாரனும் பெயரனுமாகிய ஜிஹாங்கீர் ஷாஜஹான் என்னும் இருவரும் இறந்து பட்டனர். பிறகு, மகம்மது மதத்தில் மிகுந்த அழுத்தமான பக்தியுடையவரான ஒரு சக்கரவர்த்தியானவர் மொகலாய சிம்ஹாஸனத்தில் வீற்றிருந்தார். அவர் தமது மதத்தில் ஆழ்ந்த பக்தியுடையவராயினும் பிறர் மதத்தில் த்வேஷமுமுடையவராக இருந்தார். அவர் தமது மதமாகிய மகம்மதிய மதக்கொள்கைகளை நம்பி நடவாதவரை உபத்திரவப்படுத்தும் ஸ்வபாவமுடையவராக இருந்தார். அதனால், ஹிந்துக்கள் மிகுதியும் துன்பப்பட்டுக்கொண்டிருந்தனர். அவர்களுடைய கோவில்கள் தரைமட்டமாக்கப்பெற்றன. அவர்களுடைய நிலவகைகள் அரசாங்கத்துடன் சேர்த்துக்கொள்ளப்பெற்றன. ஆகையினால் மொகலாய ராஜ்யமெல்லாம் அதிருப்தியும் கலக்கமுமே தலையெடுத்தாண்டுகொண்டிருந்தன. இத்தகைய அவசியமான காலத்தில்தான் நமது சரித்திரநாயகராகிய வீரருடைய ப்ரதாபம் பிரகாசிக்கலாயிற்று.

மேனாட்டுச் சரித்திரக்காரர்கள் நமது வீரரை ஒரு கொள்ளைக்காரரென்றும் சதிகாரரென்றும் வெறுத்து எழுதுகிறார்கள். ஆகையினால், நாம் அவருடைய குணாதிசயங்களையும் ஒழுக்கங்களையும் பற்றியாராய்ந்து எழுதவேண்டியது அவசியமாகின்றது. சித்தூர் ரஜபுத்திரகோத்திரத்தவராகக் கவனிக்கப்பெறும் நல்ல வமிசத்தவர்களாகிய போன்ஸ்லே குடும்பத்திற் பிறந்தவராதலின், நமது சிவாஜி கொள்ளைக்காரர்களாக இருந்திருக்க நியாயமில்லை. இவர் ஒரு நல்ல தேசாபிமானியாக இருந்ததனால், தமது உபாயங்கள் நிறைவேறும்பொருட்டுத் தமக்கு இயற்கையாகவேயமைந்துள்ள வீரச்செயல்களையும் குதிரையேறுஞ் சாமர்த்தியத்தையும் காட்டுவதற்குச் சமயம் வாய்த்தபோதெல்லாம் அவற்றைக் காட்டாமலிருந்திருக்க முடியாதவராக இருந்தார். அவர்க்கு உயர்ந்த நோக்கங்களும் வேதாந்தக் கொள்கையும் இபற்கையாகவே இருந்தன. தமது தேசத்து ஜனங்களுடைய கொள்கைகட்கும் சௌக்கியத்துக்கும் விரோதமாக அரசாக்ஷிசெய்துகொண்டும் கொடுமைகளையே செய்துகொண்டும் இருக்கிற மகம்மதிய ராஜாங்கத்தின் தவறுகளைத் தடுத்துச் சீர்திருத்தவேண்டுமென்பதே அவரது முக்யமான கொள்கையாக இருந்தது.

தக்ஷிணத்தில் சிவனேரி என்னும் கோட்டையில் 1627-ம் வருஷம் மேமாதம் சிவாஜி பிறந்தார். அவரது பிதாவாகிய ஷாஜி என்பவர் பீஜபூர் ராஜ்யத்தில் உத்யோகத்திலமர்ந்திருந்தார். அவரது தாயான ஜீஜிபாய் என்னும் பெண்ணரசி மிகுந்த தேசாபிமானம் படைத்திருந்தார். அவருக்கு மகம்மதியர் செய்துவரும் அக்கிரமங்களில் மிகுந்த வெறுப்பு இருந்துகொண்டே இருந்தது. இந்த அம்மைதான் நமது சரித்திர நாயகராகிய சிவாஜியை, சொந்த தேசத்திலும் சொந்த மதத்திலும் மிகுந்த அபிமானங்கொண்டு ஒழுகும்படி ஆயத்தப்படுத்திவிட்டவர்.

இவருக்குத் தமது பால்யவயதுமுதற்கொண்டே மகம்மதியரிடம் வெறுப்பென்பது பிரதானமான கொள்கையாக இருந்தது. இவரது பத்தாவது வயதில், பீஜபூர் மாகாணத்தில் இருந்துகொண்

டிருந்தபோது, மகம்மதியரின் அவசியமான வழக்கமாக இருந்த ஸலாம் செய்தலைத் தமது பிதாவுக்குப் பெரிய உத்தியோகஸ்தரைக் கண்டகாலத்துங்கூடச் செய்யச்சம்மதியாதவராக இருந்தார்; அப்போதே அவரது தலை போயிருக்குமானாலும், அவரது தகப்பனாருடைய செல்வாக்கினால் அப்படியாகாமலிருந்தது.

சிவாஜிக்கும் அவரது தாயாருக்கும், தங்களால் வெறுக்கப்படும் மகம்மதியர்கள் மத்தியில் இருந்து வாழ்வதற்கு இஷ்டமில்லாதிருந்ததனால், ஷாஜியின் ஜாகீரான பூனாவிலேயே சிலகாலங்கள் வசித்துக்கொண்டிருந்தார்கள். அங்கே சிவாஜியானவர், ஷாஜியின் உண்மையுள்ள வேலைக்காரராகிய தாதாஜீ கண்டதேவர் என்னும் ஒரு வைதிக ஹிந்துவினுடைய மேற்பார்வையில் இருந்துவந்தார். தாதாஜீ கண்டதேவரது உபதேசங்களினாலும்பழக்கங்களினாலும் நமதுசிவாஜிக்குத் தேசாபிமானமும் மதாபிமானமும் மேம்பட்டு வளர்ந்து கொண்டுவந்தன. அவருக்குத் தமது குலதெய்வமாகிய அம்பாள் பவானியிடத்தில் மிகுந்த பக்தி ஜனித்திருந்தது.

சிவாஜிக்கு, ஹிந்து புராணங்களையும் சாஸ்திரங்களையும் அடிக்கடி கேட்பதில் வெகு பிரியம் உண்டு. வயதுசென்றவர்களும் உலக அநுபவமுடையவர்களும் படித்தவர்களும் ஒழுக்கமுடையவர்களுமான பெரியோர்கள் கதைசொல்லப்புகுந்தால், அந்த இடத்தைவிட்டுப் பெயர்ந்துபோகாமல் உணவையுங்கூட மறந்திருந்துவிடுவராம். தெருக்களில் இராக்காலங்களில் புராணகாலக்ஷேபங்கள் நடக்குமிடங்கட்குச் சென்று, அங்குநடக்கும் இராமாயண பாரதகதைகளைக்கொஞ்சமும் அலட்சியஞ்செய்யாமல் கேட்டுக்கொண்டிருப்பர். இங்கேதான் இவருக்கு மாவலிகளுடைய சிநேகம் மிகுதியும் கிடைத்தது. இவர்களுடைய உதவியினால்தான், தமக்குப் பிற்காலங்களில் மிகுதியும் உபகாரமாக இருந்த தக்ஷிணதேசக்குன்றுகளின் பிரதேசங்களை விவரமாக நமதுசிவாஜி தெரிந்துகொண்டார். அந்த மாவலிகள் இவர்க்கு அதிவினயமான நண்பர்களாக இருந்தார்கள். இவர்களைப்போன்ற இன்னும் சில வீரர்களையும் இவர் நேசித்துக்

கொண்டனர். இவர்களெல்லாரும் நமது சிவாஜியின் பொருட்டு உயிரையுங்கொடுத்துதவக் கூடியவர்கள்.

நமது சிவாஜிக்கு எழுதவும் படிக்கவும் கூடத்தெரியாது; ஆயினும் யுத்தப்பயிற்சியில் மிகுதியும்தேர்ந்தவராக இருந்தனர். அவர் வில்வித்தையில் தேர்ச்சிபெற்றுக் குறிதவறாமல் எய்யும் பழக்கமும் பெற்றிருந்தனர். மஹாராஷ்டிரர்களே குதிரையேற்றத்தில் கீர்த்தி பெற்றவர்களானாலும் இவர் அதில் மிகுதியும் வல்லவராக இருந்தார்.

இவரது வெற்றிக்காலங்களெல்லாம் 1646-ம் வருஷம் முதற்கொண்டுதான் ஆரம்பித்தன. அவர் முதன்முதல் டோர்ணுகோட்டையைப் பிடித்தார். பிறகு கோட்டை கோட்டைகளாகப் பிடித்துக்கொண்டு வெற்றியும் பலமுங்கொண்டவரானார். சண்டை தொடுத்து வெற்றிபெறுவதில் அவருடைய காலமும் உதவிபுரிந்து வந்தது. பிஜபூரில் உட்கலகங்கள் மிகுதியாக இருந்ததனால், சுல்தானுக்கு வெளிநகரங்களை அடிக்கடி கவனிக்கக்கூடாமை நேர்ந்திருந்தது. கடைசியாக, பீஜபூரிலிருந்து தம்மை எதிர்க்கவந்த சேனையையும் சிவாஜி மிகவும் சுலபமான தந்திரத்தினால் ஒதுக்கிக் கொண்டனர். இச்செயலானது ஒரு குற்றமாக ஆராயக்கூடியதாயினும், இதனை மிகவும் பொறுமையுடன் எண்ணிப்பார்த்தோமானால் ஒரு உண்மையான முடிவுக்குவருவோம். இந்தச்சேனைக்குத் தலைமை பூண்டுவந்த அப்ஸல்கான் என்பவன் தான் வரும் வழியிலிருந்த பண்டார்புரம் துலஜாபுரம் என்னும் ஸ்தலங்களில் சென்று விடோபா அம்பாபவானி இத்தெய்வங்களுடைய கோவிலுட்புகுந்து விக்கிரகங்களை யுடைத்துக் கோவிற்பிரதேசங்களிலெல்லாம் பசுவைக்கொன்ற இரத்தத்தைச்சிந்தி அக்கிரமங்களைச் செய்துகொண்டு வந்தான்; ஒரு பக்தியுள்ள ஹிந்துவின் நோக்கத்துக்கு இது முற்றும் விரோதமும் மனதுக்கு வெறுப்பும் தரக்கூடியதொன்றன்றோ? ஒரு ஹிந்துவானவன் தனதுதேசாபிமானம் தெய்வபக்திஇவற்றோடு இச்செயலை ஆழ்ந்து கவனித்தால், சிவாஜியுத்ததர்மத்துக்கு விரோதப்படச்செய்த இக்காரியமும் ஒத்துக்கொள்ளும்படியாகவே இருக்கும்.

பீஜபூர்க்கலகங்களெல்லாம் 1659-ம் வருஷத்திலிருந்து 1662-ம் வருஷம் வரையிலுமே இருந்தன. முடிவில் இவரது சுதந்திரத் தன்மையை பீஜபூர்வாசிகள் நன்றாயுணர்ந்து கொண்டனர். மொகலாயர்களை எதிர்த்து நடத்திய கலகத்திலும் சிவாஜிக்குத் தக்கவெற்றியே கிடைத்தது. மொகலாய தளகர்த்தரில் சிறந்தவனான ஷைஸ்டகான் என்னும் வீரனுடைய தந்திரத்திலிருந்துங்கூட வெகு சுலபமாகத் தப்பித்துக்கொண்டார். கடைசியாக, மொகலாய தளகர்த்தரில் ஒருவரான ஜயசிம்மராஜனது தந்திரத்தினால், சிவாஜி ஒரு நிபந்தனைக்கு உட்பட்டு டில்லியிலுள்ள மொகலாயக் கச்சேரிக்கும் போகும்படி நேர்ந்தது. அங்கே தமக்குத்தகுந்த மரியாதை கொடுபடாதிருந்ததுடன், உயிருக்கும் அழிவுவரும்போலிருந்ததனால், சிவாஜி வெகு தந்திரமாக முயன்று, ஒரு பக்ஷணக்கூடையின் மூலமாகத் தப்பித்துக்கொண்டு மொகலாய அரண்மனையிலிருந்து வெளிவந்து டில்லியை விட்டே ஓடி வந்து விட்டார்.

பிறகு, ஒருபொழுதேனும் மொகலாயர்கையில் அகப்படவில்லை இனியும் மொகலாயருக்குக் கீழ்ப்படியாதிருந்து, அவர்களால் பிடிக்கப்பட்டுள்ள கோட்டைகள் எல்லாவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாகப் பற்றிக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டனர். இதனிடையில் சூரத்திலிருந்த ஆங்கிலப்பண்டகசாலை யொன்றையும் அச்சமயத்தில் அவர் கொள்ளையிடும்படி நேர்ந்தது.

1674-ம் வருஷத்தில் சிவாஜி மகாராஜா என்னும் பட்டத்துடன் கிரீடம் புனைந்து கொண்டு சிம்மாஸனம் ஏறினர். பட்டாபிஷேகம் நடத்திக்கொள்வதற்குமுன், தமதுகுலதெய்வமாகிய அம்பா பவானியின் கோயிலாகிய பிரதாபகார் என்னுங் கோட்டைக்குப் போய்ச் சில காலமிருந்து அம்மனைப் பிரார்த்தனை பண்ணிக்கொண்டிருந்தார். அங்கே இவர்க்குப்பவானிபிரத்தியக்ஷமாகி மஹாராஷ்டிரரது எதிர்காலவாழ்வையும் பெருமையையும் பற்றிச் சொன்னதாகவும் அறியப்படுகின்றது. பிறகு ராஜகாட்டில்தான் பட்டாபிஷேகம் நடந்தது. அது ஒரு பெரிய ஆச்சரியமான காட்சியாக இருந்தது. அன்று இந்திய சரித்திரத்திற்கு முக்ய விஷயமான நாளாகவும்

கவனிக்கப்படுகின்றது. ஏனெனில் அந்தநாள்தான் உலகத்தில் மஹாராஷ்டிராப்பெருமையை வெளிப்படுத்தினநாள்.

இது முதலான சிவாஜியின் வாழ்நாட்கள், யுத்தத்தில் அதிகமாகச் செலவிடப்படாத நாட்களாக இருந்தன. அவரும், தமது எஞ்சிய வாழ்நாட்களை மதசம்பந்தமான ஒழுக்கங்களிலும் முக்யமாக ஜபத்திலும் கழிக்க எண்ணங்கொண்டார். அவர் தமதுகுருவாகிய ராமதாஸரிடம் ராஜ்யத்தை ஒப்பித்துவிட்டு ஸந்யாஸியாக விரும்பினாராஹுலும், அவரது குருஅதற்கு இடங்கொடாமல், ஜனங்களின் நன்மைக்காக அவரே அரசனாக இருக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தி அரசாட்சியை நடத்திவரும்படியாகச் செய்துவிட்டார்.

சிவாஜியின் வாழ்நாட்களின் வேலை முடிந்து விட்டது. அவர் மொகலாயரை நிலைகுலைத்து அவர்கள் பலத்தைக் குறைவடையும்படியாகச் செய்து விட்டார், அவர் ஹிந்துராஜ்யாதிபதியத்துக்கு விதைவிதைத்துச்சென்றனர்; இன்னும் ஒரு இருபதுவருஷகாலம் உயிருடன் இருந்திருந்தாராஹுல், இந்திய சரித்திரமே வேறுவிதமாக எழுதப்பட நேர்ந்திருக்கும். இடைவிடாத முயற்சியினல் வெற்றிகொண்டாராஹுலும், அம்முயற்சி அவரது தேஹத்துக்கும் மூளைக்கும் தளர்ச்சியைக்கொடுத்து, அவரது 53-வது வயதில் அதாவது 1680-ம் வருஷம் ஏப்ரில் மாதம் ஐந்தாந்தினத்தன்று அவரது உருவை இந்நிலவுலகினின்றும் மறைத்துவிட்டது.

அவரது ராஜாங்கக்காரியங்களெல்லாம் சாணக்யரிஷியின் வாக்குப்படியே யமைக்கப்பட்டிருந்தன. தற்கால ராஜாங்க முறையும் அதனையே ஏறக்குறைய ஒத்திருக்கிறது என்று சொல்லலாம். பஞ்சாயத்துமுறை ஏற்படுத்தப்பட்டிருந்து, தேசாசாரக்குற்றங்களெல்லாம் அப்பஞ்சாயத்தின் மூலமாகவேவிசாரிக்கப்பெற்றன. துஷ்கிருத்யங்களெல்லாம் மனுமுறைப்படியே விசாரிக்கப்பெற்று தண்டனையும் விதிக்கப்பெற்றன. பிரதான அரசாட்சி ஸ்தானம், ஒவ்வொரு இலாகாவின் தலைவரையும் அங்கத்தினராகப் பெற்றிருந்தது. அது

அஷ்டப்ரதானி ஸபை என்று பெயரிடப் பெற்றிருந்தது. முதல் மந்திரிக்குப் பேஷ்வாவென்று பெயர். மற்ற உத்தியோகஸ்தர்கள், கணக்குச்சோதனைத் தலைவர் என்றும், பத்திரபாலகன் என்றும், காரியநிர்வாஹி என்றும், அக்ரசேனாதிபதியென்றும், அயல்நாட்டு மந்திரியென்றும், பிரதான நியாயாதிபதி என்றும், மதப்பிரசாரகத் தலைவரென்றும் எழுவராவார்.

சில அவசியமான சீர்திருத்தங்களைச் செய்ததனாலே, ஜனங்கள் சிவாஜியை மிகவும் பிரியமாகக் கொண்டாடினார்கள். முன்காலங்களில் நிலங்கள் வகுக்கப்பட்டு, அதன் குடியானவன் எவ்வளவு காலம் வரையில் சர்க்காருக்குச் செலுத்தவேண்டியதைத் தவறாது செலுத்திவிடுகிறானோ; அதுவரை மேல்உத்தியோகஸ்தர்கள் அவ்வரி எந்தவிதமாக வசூலிக்கப்பட்டது என்பதை விசாரிக்கப்புகுந்ததில்லை. அதனால் ஜனங்கட்கு இடுக்கணும் கொடுமையும் உண்டாகியிருந்தன. குடித்தனக்காரர்கள் பத்திரத்துடன் வசிக்க முடியாமலிருந்தது; ஏனெனில், குடியானவர்களிடமிருந்து வரியெல்லாம் வசூலாகும் வரையில், கீழே உள்ள உத்யோகஸ்தர்கள் அவர்களைப் பலவிதத்திலும் துன்புறுத்திக்கொண்டேயிருந்தார்கள். இந்தமுறையில் சிவாஜி புகுந்து, ஜனங்கள்படும் பரிதாபமான துயரங்களைக் கவனித்து, அந்த இலாகாவை இரண்டு விதமாகப் பிரித்துச் சீர்திருத்தினார். முதலாவது:—விளைவை நன்றாகக்கவனித்தே தீர்வை வசூலிக்கவேண்டும்; பஞ்சகாலத்தில் தீர்வைவசூலிக்கப்படாது. இரண்டாவது:—உயர்ந்த உத்யோகஸ்தர்கள் நேரில் சென்றே தீர்வை வசூலிக்கவேண்டும் என்பவையே. குடியானவர்கட்கு உழவுமாடுகளும் விதைகளும் தானியங்களும் பணங்களும் கொடுத்து உதவப்பட்டன.

சிவாஜியின் சேனைகள் யுத்தத்துக்கு வேண்டியபடியாகத் தற்காலம்போலப் பயிற்சி செய்விக்கப் பட்டனவல்ல. அவைகள் ஒழுங்கு தவறிய முறையிலும் யுத்தஞ் செய்ததுண்டு. ஆனாலும், தற்காலத்துப்பட்டாளங்களினால் எதிரிகட்கு உண்டாக்கப்படும் கஷ்டநஷ்டங்களைக் காட்டிலும் அதிகமாக அந்தச் சேனைகளால் கஷ்டநஷ்டங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன.

சிவாஜி படிக்கத் தெரியாதவராயினும் கல்வி விருத்தியைத் தேசத்தில் நாட்டினவர். அவரது அரண்மனையில் துகாராம் என்றும் ராமதாஸரென்றும் இரண்டு பண்டித மணிகள் இருந்தனர். அவர்காலத்து வடஇந்திய நாட்டிலும் மேற்கிந்திய நாட்டிலும் இருந்த பண்டிதர்கள் சிவாஜியின் தர்ப்பாருக்குச் சென்று தங்களது யோக்யதைக்குத் தக்கபடியான பரிசும் பெற்றுச் சென்றனர். இவரைச் சதிகாரரென்று மேலைநாட்டுச் சரித்திரக்காரர்கள் எழுதியிருப்பது, நிரவிசாரித்தெழுதாத குறையினாலேதானென்று ஊஹிக்க வேண்டியிருக்கிறது. நமது தற்காலத்து நீதியநுபவங்கட்குத் தக்கபடியாக ஆராய்ந்து சென்று முற்காலத்தவர்களது தர்மங்களையும் ஒழுக்கங்களையும் இகழ்ந்துவிடுவது கூடாது. "இருபதாம்நூற்றுண்டின் நாகரீகத்தைக் கற்ற ஒருவன், பதினேழாம் நூற்றுண்டவரது ஒழுக்கங்களைப்பற்றி வெகு சீக்கிரத்திலும் சுலபத்திலும் இகழ்ந்துவிடலாம்." என்று ஒரு சரித்திரக்காரர் சொல்லி, அப்படி இகழ்ந்து தள்ளிவிடாது, அந்தக் காலத்துத்தர்மமும் நீதியும் நிலைமையும் எப்படியிருந்தனவென்று கவனித்தபின்னரே ஒருவரைப்பற்றிக் குறைவாகச்சொல்லவேண்டுமென்று வற்புறுத்துகின்றார். அந்தப் பதினேழாம் நூற்றுண்டில் இந்தியாவில் மகம்மதிய ஆட்சியே நிறைந்திருந்தது. அவர்கட்கு, ராஜாங்கக் காரியங்களில் தர்மநோக்கமே பெரும்பாலும் இல்லாமலிருந்தது. மதவிஷயத்தில் வெறிகொண்டிருந்தார்கள். துரோக காரியங்களாலேயே அவர்கள் வெற்றிபெற்றிருந்தார்கள். இவர்கள் மத்தியில்தான் நமது சிவாஜி இந்து மதாபிமானியாகவும் இந்தியதேசாபிமானியாகவும் இருந்து தமது உயர்ந்தஎண்ணங்களைநிறைவேற்றவேண்டியவராகஇருந்தனர். எந்த மதத்தினராயினும் எந்தத் தேசத்தினராயினும் எந்தஜாதியினராயினும் சரி, பெண்கள் விஷயத்தில் மிகவும் மரியாதையும் தர்மமும் காட்டியே வந்தார். பகைவரகத்துப்பெண்களையும் தம்மகத்துப் பெண்களைப்போலவே ஆதரிப்பர். கீழ் வீழ்ந்துபோன எதிரியை ஒரு அடிகூட அவர் அடித்ததில்லை. சரணம் புகுந்தவரிடம் மிகுதியும் கருணைகாட்டி வந்தார்.

காபிஹான் என்னும் மகம்மதியர் இவருக்கு எதிரியாக விருந்தும் பின் வருமாறு எழுதுகிறார்:—

"சிவாஜியானவர் தமது ஆட்களைக் கொள்ளையடிக்க அனுப்பும்போது, "தோரி கொரான் பெண்கள் இவர்களைத் தீண்டவே படாது" என்று வற்புறுத்தி யனுப்புகிறார். எப்போதாயினும், கொரான் புஸ்தகம் தம்கையில் கிடைக்குமாயின், அதற்குமரியாதையை முதலில் செய்துவிட்டுப்பிறகு, அதனை தம்மிடம் உழைத்து வரும் ஒரு முகம்மதியனுக்குக்கொடுத்து மகிழ்வர். ஒரு ஹிந்துப் பெண்ணையாவது ஒரு மகம்மதியப்பெண்ணையாவது தமது ஆட்கள் சிறைபிடித்து வந்தாரானால் அப்பெண்கட்குரியார் வந்து மீட்டுப் போகும் வரை தாமே அவர்க்குக் காப்பாக இருப்பார்."

ஒரு தேசத்தின் சரித்திரத்தை மாற்றித் தேசஒழுங்கில் எழுதப்படும்படிச் செய்ததேசாபிமானிகளில் ஒருவராவார் நமதுசிவாஜி இவரே ஒரு பெரிய மஹானும் ஒருபெரிய அரசனுமாவார்.

பத்திராதிபர்.

—✕—

மாககாவ்யம் அல்லது சிசுபாலவதம்.

(இரண்டாவது ஸர்க்கம்)

(385-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிறகு சிசுபாலனை வதஞ்செய்யப் புறப்படவேண்டிய ஏற்பாடுகளைக் கிருஷ்ணன் செய்துகொண்டிருக்கையில், ராஜஸூயயாகஞ்செய்ய வேண்டுமென்று அவாக்கொண்ட தர்மபுத்திரர், 'யாகத்திற்கு அவசியம் வந்திருந்து யாகத்தை இடையூறு இல்லாமல் நடத்திவைக்கவேண்டும்' என்று கண்ணபிரானைப் பிரார்த்தித்தார். அப்போது கண்ணபிரான் யாகத்திற்குப் போவதா அல்லது ஆரம்பித்த காரியத்தையே செய்வதா என்று பலவாறு ஆலோசித்து, ஒரு வழியும் தோன்றாமல் தம்மைக் காட்டிலும் பெரியோர்களா யிருப்பவர்களிடம் இவ்விருகாரி

யங்களின் விவரங்களையும் வித்யாஸங்களையும் அவசரத்தையும் தெரிவித்துப் பிறகு அவர்கள் சொல்லுகிறபடியே செய்யப் பார்ப்போம் எனத்தீர்மானித்துப் பலராமனுடனும் உத்தவருடனும் மந்திராலோசனை செய்வதற்காக, அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு ஒரு சபாமண்டபம் வந்துசேர்ந்தார்.

ஆகாயத்தில் பிருஹஸ்பதி சுக்கிரர்களுடன்கூடிய சந்திரன்போல், உத்தவ பலராமர்களுடன் கூடிய கிருஷ்ணன் அப்பொழுது அந்தச் சபாமண்டபத்தில் விளங்கி யிருந்தார். உலகத்தைச் சாந்தப்படுத்துவதற்கென்று இம்மூவரும் ஒன்று சேர்ந்தபோதிலும் அக்கினியைப் போலப்பிரகாசத்துடனிருந்தபடியால், தாங்கள் உட்கார்ந்திருக்கும் ஆஸனங்களையும் தஹித்து விடுவார்களோ என்றுஎண்ணக்கூடியபடி சிவந்தகாந்தியுடன் கூடியிருந்தார்கள். பக்கத்தில் ஒருவருமில்லாமல், இவர்கள் மூவருமே உட்கார்ந்திருந்தபோதிலும், சமீபத்திலுள்ள ரத்தினத்தூண்களில் இவர்களுடைய பிரதிபிம்பங்கள் பதிந்திருந்ததால் அநேகம் பேர்களுடன் சூழப்பெற்றவர்களைப்போலவே, தோன்றினார்கள். உயர்ந்துள்ள பொன்னாஸனங்களில் இம்மூவரும் உட்கார்ந்திருந்ததால், ஸிம்ஹங்கள் கம்பீரமாக முழங்காற்படியிட்டு உட்காரப்பெற்றிருக்கும் திரிகூட பர்வதத்தின் சிகரங்கள்போல அவ்வாஸனங்கள் விளங்கின. அப்பொழுது, குந்தபுஷ்பங்கள் போன்ற பல் வரிசைகளையுடைய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர், தமது புன்னகையின் ஒளியினால் அந்த மண்டபத்தைப் பரிசுத்தஞ்செய்துகொண்டு உத்தவ பலராமர்கட்கு அவ்விரண்டு காரியங்களினது தாரதம்மியத்தை எடுத்துரைக்கலானார்.

நாடகத்தில் நடத்தப்போகிற கதையை ஆரம்பஞ்செய்வதற்காக ஸூத்ரதாரன் முதலானவர் வந்து பேசுவதுபோல, நீங்கள் பேசுவதற்கு அவகாசம் கொடுப்பதன் நிமித்தம், இப்போது நான் பேசப்போகிறேன். “ தர்மபுத்திர மகாராஜர் இப்போது யாகஞ்செய்ய ஆரம்பித்திருக்கிறார். அதை யான் வந்து நடத்திவைக்கவேண்டுமென்று மிகுதியுஞ் சொல்லிப்போயிருக்கிறார். இன்னும் தர்மபுத்திரர்

தேசத்திலுள்ள சகல மன்னர்களையும் சக்ரவர்த்திகளையும் தமக்குச் சிற்றரசர்களாகக்கொண்டிருக்கிறவர். திக்குதிக்காகச்சென்று சண்டை புரிந்து வெற்றிபெற்றுள்ள தமது தம்பிமார்களை வைத்துக்கொண்டே தாம் ஆரம்பித்த யாகத்தை யாதொரு விதமான இடையூறும் நேராமலே நடத்தி முடிக்கக்கூடும். மேலும், க்ஷேமத்தை விரும்பும் ஒரு புருஷன் நாளுக்கு நாள் விருத்தியடைந்து கொண்டுவரும் சத்துருக்களிடத்தில் அஜாக்கிரதையா யிருத்தல் நியாயமாகாது. விருத்தியடைந்துகொண்டிருக்கும் சத்துருவானவன் நோய்க்குச் சமானமாவானென்று பெரியோர்களுங்கூடச் சொல்லியிருக்கின்றார்கள். நாரதரும் இப்போதுதான் இங்குவந்து, ‘சிசுபாலனுடைய உபத்திரவத்தைச் சகிக்காமல், உலகம் வருந்துகின்றதாகையினால், அவனை அவச்யம் கொல்லவேண்டும்’ என்று இந்திரன் சொன்னதாகச் சொல்லிவிட்டுப் போகிறார். ஆகையினால் என் சத்துருவான அந்தச்சிசுபாலனை அவசியம் வதஞ்செய்யவேண்டியவனாக இருக்கிறேன். தேவதைகளுடைய க்ஷேமத்தையுத்தேசித்து அவனை வதைப்பதோ; சிநேகிதனுடைய க்ஷேமத்தையுத்தேசித்து யாகத்திற்குப் போவதோ; இவற்றுள் இப்போது எதனைச்செய்வது? இரண்டையும் ஒரே காலத்தில் என்னாற்செய்யமுடியாது. சிசுபாலன் எனக்குக் கெடுதல்செய்வதால், நான், அவனைக்கொல்ல விரும்புவதாக நீங்கள் நினைக்கக் கூடாது. எனக்கு எத்தனை கெடுதல்கள் அவன் செய்தாலும் நான் பொறுத்துக் கொள்வேன். ஆனால் அவன் இந்த உலகத்தையே தனது துர்நடத்தையால் தஹிக்கிறான் என்பதை நினைக்க நினைக்க எனக்கு அதிக வருத்தமும் கோபமும் உண்டாகின்றன. ஆகையால் நான் இப்போது எந்தக்கார்யத்தைச் செய்வது? என்று எனக்குத் தோன்றவில்லை. நீங்கள் எப்படிச் சொல்கின்றீர்களோ அப்படியே செய்ய ஆயத்தனாக இருக்கின்றேன். நீங்கள் உங்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்லும் வரையில், இப்போது நான் சொன்னது எனது அபிப்பிராயம். நிரம்பத்தெரிந்தவனுக்கும் செய்யவேண்டிய காரியங்களில் சந்தேஹமுண்டாவது ஸஹஜந்தானாதலால், உங்களுடைய அபிப்பிராயங்களையும் அறிந்துகொண்டு அவ்வாறே செய்யவிரும்புகிறேன்! என்று

சொன்னார். மகான்கள் இயற்கையாகவே அளவாகப் பேசுமாற்றல் கொண்டமைந்தவர்களாதலால், தமது வார்த்தைகள் முடிந்தவுடன் மௌனமாக இருந்து விட்டார்.

பிறகு, பலராமன் சத்துருவின் துர்நடத்தையை நினைத்ததனாலுண்டான கோபத்தினால் படபடவென்று துடித்துக்கொண்டிருக்கின்றனவானாலும், தமது தர்மபத்தினியான ரேவதியின் அதரபானத்தினால் மதுரமாகவும் மென்மையாகவும் ஆக்கப்பட்டுள்ள தமது உதடுகளால், முதலில் மிகுந்த கோபத்துடன் பேசவெண்ணினாரானாலும் சாந்தமாகவே பேசத்தொடங்கினார். ஏனெனில், முதலில் சொல்லப்புகுந்த தாம் சாந்தமாகச் சொல்லிவிட்டாலும் பிறகு அதனையே வற்புறுத்திச் சொல்வதற்குத்தான் இங்கு கூடியிருக்கிறாரோ வென்று ஊஹிக்கக்கூடியவரா யிருக்கிற பெரியவராகிய உத்தவர் அந்தச்சிசுபாலன் வதையைப்பற்றிய அவசியத்தை மிகவும் உறுதியாகப் பேசுவார் என்னும் திண்ணமான எண்ணத்துடனே தாம் சாந்தமாகப் பேசத்தொடங்கினார்.

* * * * *

* * * * * * *

சுரதலீலையினாலும் மது பானத்தினாலும் உண்டாயிருக்கும் வாஸனையின் பொருட்டுத் தமது முகத்தைத்தாமரையோ வென்றெண்ணிச் சுற்றிக்கொண்டிருக்கும் வண்டுகளைத் தமது பல்வரிசைகளால் வெண்மையாக்கிக்கொண்டும் பேசத்தொடங்கினார்.

(பலராமர் பேச்சு)

“ அதிக கௌரவம் பொருந்தியதாகவும் தோஷமில்லாததாகவும் உள்ள கிருஷ்ணனுடைய கேள்விகட்கு ‘ இப்போது அப்படியே செய்வது ’ என்று சொல்லப்படுவதுதான் பிரதியுத்தரமாகும் விறகுகளை எரித்துக்கொண்டு அதிகமாகப் பிரகாசிக்கிற அக்கினியானது தனது காந்தியினால் சூரியனை அதிகரிக்க முடியுமோ? முடியாது; அப்படியே அதிகமாகச் சொல்லப்பெறும் எனது வார்த்தைகள் விஸ்தாரமாக இருப்பினும், சுருக்கச்சொல்லி விளங்கவைக்கும் தன்மையையுடைய கண்ணபிரானுடைய வார்த்தைகட்கு மேலோங்கியிரா. ஆயினும் சுருங்

கச் சொல்லும் கண்ணபிரான் வார்த்தைகளாகிய சூத்திரங்கட்கு, விஸ்தரித்துச் சொல்லப்பெறும் எனது வார்த்தைகள் வியாக்கியானமாக இருக்கட்டும் என்று, தமது கருத்தும் கண்ணனது கருத்தும் ஒன்றுகத்தானிருக்கவேண்டும் என்று சூசனையுடன் கூடியஉபசாரவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே பேசத்தொடங்கினர்.

ஸி. பார்த்தசாரதிஐயங்கார்,
ஸ்ரீரங்கம்.

இல்வாழ்க்கை இயல்.

" அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று " (திருக்குறள்)

இல்—வீடு; அறம்—தருமம்; வீட்டின்கண் வாழ்ந்து நின்று புரியும் தருமமென்பதாம். ஈண்டுத் தருமமென்பது, பொதுவுஞ்சிறப்புமென இருவகைப்படும். எச்சாதி எச்சமயத்தாரும் ஒருங்கு பேணற்பாலனவாகிய கொல்லாமை கள்ளாமை கள்ளுண்ணாமை பொய்யாமை வெகுளாமை இன்னுசெய்யாமை முதலியவும் இன்னோரன்னபிறவும் பொதுவறங்கள் எனப்படும். ஒவ்வொரு பிரிவினரும், தத்தம் சாதிசமயங்கட்குரிய நியதிகளைக் கடவாது விதித்தபடி யொழுகுதல் சிறப்பறமென்னப்படும். முதற்கூறிய பொதுத்தருமம் ஒருவனிடத்தில்லையாயின், பிற்கூறியசிறப்புத்தருமத்தினுற் பயன்பெருன். அதனுல் அவ்விருவகையறங்களையும் ஒருங்கே பேணி வாழ்தல் அறிவாளர்கடமை யென்பதுதானே விளங்கும். இதுநிற்க.

இல்லறவாழ்க்கைக்கு இன்றியமையாத முதற்றுணையாய் நிற்பவள் மனைவியே. மனைவி, அகமுடையாள், இல்லாள் என்பனவாதிய பெயர்களெல்லாம் அவ்வப்பொருள்களையே கொண்டு நிற்பன. மனிதர் வாலிபப்பருவங்கடந்து யௌவனப்பருவம் அடையுங்காலம் மேலேகூறிய அறங்களை இயற்றுதற்கு ஏற்ற அறிவாற்றல்கள் நிரம்பப்பெற்றவராகின்றனர். அதனோடு காமசுகம் முதலியன துய்த்

தற்கும் உரியராகின்றனர். அதனால் அக்காலத்து அவ்விருவகைப் பேறுகளுக்கும் துணைக்காரணமாகிய மனைவியை அடைவது அவர்க்கு இன்றியமையாக்கடமையாயிற்று. ஆகவே அத்தகையயௌவனப் பருவம் எய்தாத வாலிபப்பருவத்தினும், அதுகடந்த விருத்த பருவத்தினும் மனையாளை விரும்புதல் குற்றமாமென்பதுதானே விளங்கும். அங்ஙனம் இல்வாழ்க்கைக்குத் துணைக்காரணமாகிய மகளிரை அடைவதற்காக அவரவர் ஜாதிசமயங்களில் ஏற்பட்டிருக்கும் நியதியான கிரியையே விவாகம் கலியாணம் என்பனவாதிப் பெயர்களால் வழங்கும். அந்நியதியான சடங்குகள் இல்லையாயின், அப்பொழுது பகுத்தறிவில்லாத விலங்கு பறவைகளைப்போல்நேர்ந்த இடத்தில் நேர்ந்த காலத்தில் நேர்ந்த ஆண் பெண்கள்கூடிப் பிரஜா விருத்தி செய்தல் ஒன்றுமட்டுமே இயலுமன்றி, அறங்களைப் பரிபாலித்துப் பயன்கொள்ளச் சிறிதும் இயலாது. அதுமட்டோ! காமங் காரணமாக ஒருவருக்கொருவர் பெரும்பகைகொண்டு போர்விளைத்து அழியவும் நேரிடும். இன்னும் அளவற்ற தீமைகட்கிடனாகி உலகத்தார் ஒருங்கேகெடுவார். அதனால் தொன்றுதொட்டு உலகத்திலுள்ள எச்சாதி எச்சமயத்தார்க்கும் “ விவாகம் ” என்ற நியதியான சடங்குகள் ஏற்படுத்தப்பட்டு நடைபெறுகின்றன. இது நிற்க.

ஒருவன் விவாகஞ் செய்தற்குரிய பருவம் அடைந்தவுடனே தாய்தந்தை முதலிய முதியோராலாவது, தானாகவாவது ஒரு பெண்ணைத் தெரிந்து கொள்கின்றான். இதுபாவரும் கவனிக்கவேண்டிய அவசியமான சிலவிஷயங்களைச் சிறிது விசாரிப்பாம். அதாவது குறைந்த அறிவுடைய மாந்தர்சிலர் விவாகம் என்பது எதற்காகச் செய்யப்படுகின்றதென்பதையும், பிறவற்றையும் ஊகித்துணராது விடயாதிகளில் பாய்ந்து செல்லும் இந்திரிய சேட்டைமட்டும் மிக்குடையராய்ப்பார்வைக்குமட்டும் அழகாய்த்தோன்றுகிற பெண்களை அவாவுகின்றார்கள். பேரறிவில்லாத சிறுகுழந்தைகள் தங்களுடலுக்கு ஆரோக்கிய வுறுதிதரும் நல்லுணவுகள் இவையென்று பகுத்துணர்தலின்றி நாவுக்கு இனிக்கும் பொருளெதுவோ அதையே விரும்புவது வழக்கம். அவ்விருப்பத்தின்படி கொடுத்துவந்தால்,

அப்பிள்ளைகள் விரைவிலே பெருநோயடைந்து இறந்தொழியுமென்பது திண்ணமன்றோ? இதுபோலவே குணம் முதலியவைகளைப் பகுத்துணர்தலின்றி அழகொன்றைமட்டும் விரும்பிப் பெண்கொள்வோரும், கொள்விப்போரும் அறிவில்லாச் சிறுகுழவிகளாய்ப் பின் துன்பங்களையடைவரென்க. இதனால் அழகு கூடாதென்பது நமது கருத்தன்று; குணத்தின் அழகே அழகென்று மூத்தோர் கூறுகின்றமையால், முகத்தழகு குறைந்திடினும் அகத்தழகு நிறைந்திருப்பவரைத் தேடியடைதல் அறிவாளர் தொழிலாமென்பதை அறிவித்தாம். உலகத்திற்சாதிசமயங்கள் அனந்தமாய் விரிந்து நடைபெறுவதினாலும், அவ்வரம்புகளைக் கடந்து செல்லுதல் எத்திறத்தாருக்கும் எளிதாகாமையாலும், அவ்வரம்புகளும் மனிதர்க்கின்றியமையாதனவாய் அறுதியே அமைந்துள்ளனவாதலாலும், ஓரொருவன் ஓரில்லக்கிழத்தியை அடையவிரும்புங்கால் தம்மரபுக்கேற்ற விடத்திலேயே கொள்ளவேண்டியவனாகின்றான். (யுக்தியனுபவங்கட்குப்பொருந்காததும், பயன்றராததும், இடைஞ்சல் விளைப்பதும் நவீனமாகத் தோன்றியதுமாகிய ஜாதிசமயவேறுபாடுகளைத் தொலைப்பது குற்றமாகாதென்க.) அங்ஙனங்கொள்ளுங்கால், பெரும்பான்மை குணநலங்களையும், இயன்றளவு உருவநலங்களையும் பரிசோதித்துக் கொள்வதே அறிவாகும். இவ்வுணர்ச்சியில்லாத வாலிபர் சிலர், ‘அந்தப்பெண் அழகாயில்லை’ யென்று வெறுப்படைவர். அதற்கேற்றபடி சிலர், ‘ஆம்! ஆம்! அது அழகில்லை’ யென்று தூண்டிவிடுவர். அதனால் விவாகமுயற்சியிலிருக்கும் வாலிபரது மனம் பின்னும் குழம்பிப் பின்வாங்க ஏதுவாகும். பிறகு நிர்ப்பந்தத்தால் அப்பெண்ணையே மணக்கநேரிடுமாயின், மணமகன் முகவாட்டத்தையும், அதிருப்தியையும் உடையவனாய் மணவினையைநிறைவேற்றிக்கொண்டு, பின்னிகழும் சுபக்கிரியைகளில் மனப்பற்றில்லாதவனாகிறான். ஆகவே, ஓர்போது அன்னியமாதர் பொதுமாதர், முதலினோர் சிறிது அழகுள்ளவராக நேர்வாராயின், அவர்களைத் தோழமைகொள்ள முயலுகிறான். முயற்சி நிறைவேறினால், ‘பழக்கங்கொடிது,’ ஆகலின், அத்தியநெறியில் இழிந்து நிற்கிறான்.

அதனால் அவன் இல்லறத்தாலடையக்கூடிய பெரும்பயன் எல்லாவற்றையும் இழந்துவிடுவதோடும் நில்லாது, பெருந்துன்பங்கட்கும் கொடுநோய்கட்கும் பழிபாவங்கட்கும் இரையாய் விரைவில் அழிகின்றான். இது நிற்க.

இங்ஙனம் மனக்குறைவடைந்த மணமக்களுள்ளே பலர், மேற்கூறியபடி வரைவின் மகளிரை விரும்பாது அமைதியோடும், சிறிது உற்சாகக்குறைவோடும், தாம்மணந்த இல்லக்கிழத்தியோடு வாழ்கின்றார்கள். இப்படிச்சொற்பநாள் வாழ்க்கையில், அழகில்லையென்று தாம் உள்ளே வெறுத்திருந்த இல்லக்கிழத்தியின் குணவொழுக்கங்கள் தமது குலவொழுக்கங்களோடு ஒத்து நிற்பதையும், அவளால் தமக்குப் பல நன்மைகள் விளைந்து வருதலையும், நோக்கித் தாம் கொண்டிருந்த அருவருப்பைப் பையப்பைய அகலவிட்டு, அவர்கள் மீது அதிக அன்பும் அபிமானமும் உடையராகின்றார்கள். பின்னர், மனையாட்டிகளும் இவர்கள்மீது அவ்வாறே பிரதியன்புபாராட்ட, உடலிரண்டும் உயிரொன்றுமாய்க் கலந்து பலநலங்களையும் துய்த்து இனிது வாழ்கின்றார்கள்.

இத்தன்மையுடையாரை ஓரிடம், ஈரிடங்களிலல்ல; பற்பல இடங்களிலும் அனுபவத்தால் நன்குணர்ந்திருக்கின்றோம். வேறு சில விவேகிகளாகிய மணவாளர்கள் தாம்கொண்ட இல்லக்கிழத்தி தமது குணவொழுக்கங்களோடு ஒத்துநில்லாது வேறுபடக் கண்டபோது, புத்தியைப் புறஞ்சிதறவிடாது சாவதானமாய் ஒழுகும் ஒழுக்கத்தில், சாமம் பேதம் தானம் தண்டம் என்னும் சதுர்வித உபாயங்களாலும் (காட்டு மிருகங்களையும் கைவசமாக்குவோர் பலரிருக்க நாயிற்த நாட்டு மிருகமாகிய இரண்டுகால் மிருகத்தை வசமாக்கக்கூடாதாவென நினைந்து) நாளடைவிற்றம் வயமாக்கிப் பிறகு இருகண்ணுங்கூடி யொருபொருளைப் பார்ப்பதுபோல் ஒற்றித்து நின்று இல்லறத்தை நல்லறமாக்கி இனிது வாழ்கின்றார்கள்.

(இன்னும் வரும்)

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

ஸ்ரீ:

இந்திரை மாலை.

(கோநகர்க் கற்பகவிநாயக கலாசாலை யுபாத்தியாயர்
S. ஆழ்வாரையங்கார் இயற்றியது.)

காப்பு.

பூவிற் பொலியும் புகழிந் திரைமாலை
பாவிற் புனையப் பகர்துணையாந்--தேவர்
துனிதீர்க்கு மாறன் றுணைத்தா டுதிப்பார்
பனிதீர்க்கு மாறன் பதம்.

பொன்னே மணியே புகழே சுவைவளர் பூங்கரும்பே
யன்னே யுனதாள் துதியாத வற்ப ரகம்புகுந்து
தன்னே ரிலாய்தருக் காவல னேயெனச் சாற்றலொழித்
தின்னே யருள்புரி வாயெழி லார்ந்திலங் கிந்திரையே. (௧)

கல்லும் மரமு நிலனு முருகக் கனிந்துநின்சீர்
சொல்லும் பெரியோர் துணைத்தா டொழாது துதிமொழிக
ளல்லும் பகலு மறிவினர் பாற்சென் றறைந்திடுவோர்க்
கில்லும் பொருளு மிசையுங்கொ லோவெழி லிந்திரையே. (௨)

அருள்செய் யினுமது செய்யா தொழியினு மாதரத்தாற்
றெருள்கொண்ட சிந்தையர் போலெளி யேனுநின் சீறடியென்
மருள்கொண்ட சிந்தைவைத் தேத்தியெக் காலு மகிழ்ந்திருப்ப
னிருள்கொண்ட பூங்குழ லாயெழி லார்ந்திலங் கிந்திரையே. (௩)

செந்தா மரையுறை தேவன் றிருத்தகு தேவரிறை
மந்தா கினியணி வேணியன் ஆதிய வானவர்நின்
னந்தா மரைக்க ணருள்வேட்டு நாளு மகங்குழைவ
ரிந்தார் திருநுத லாயெழி லார்ந்திலங் கிந்திரையே. (௪)

மோனந் தருமுத்தி நூல்க டெரிந்து முனிவிகந்து
ஞானந் தரவந்த நல்லோ ரிடஞ்சென்று நண்ணுகிலே
மானந் திரிந்து மதியுந் திரிந்து மனந்திரிந்த
ஈனந் தருசிறி யாரிடஞ் சேர்வதென் னிந்திரையே. (௫)

தக்கோர் துதிக்குந் தகையார்ந் திலங்குநின் றாளிணைக
ளெக்காலு முள்ளத் திருத்தும் பெருவாழ் வெனக்களித்தாய்
மிக்கார் பெரும்பே றிதுவென்று நாளு மிகமகிழ்வேன்
இக்கார் மொழியணங் கேயெழி லார்ந்திலங் கிந்திரையே. (௬)

என்செய லாவ தியாதொன்று மில்லை யிசைவவெலா
முன்செய லேயென வுள்ளந் தெளிய வுறுதிபெறு
நன்செய லேதந்து புன்செய னீக்கி நலம்புரித
லின்செய லாகுமன் றேவுனக் கேந்தெழி லிந்திரையே. (௭)

புக்கவர் புன்கண் டுடைத்தருள் சீதரன் பொற்புமிகு
மக்கரு மேனியு மம்புயத் தாளு மழகொளிருஞ்
சக்கரக் கையுந் தடந்தோளுங் கண்டு தளிர்த்திடுநீ
எக்குறையுந் தவிர்த் தென்னக மேய்ந்தரு ளிந்திரையே. (௮)

நன்னெறி யீதென்றுந் தீநெறி யீதென்று நானறியா
தன்னெறி யேசென் றுழுகினு மன்றி யடுக்குநெறி
தன்னினின் றுலுநின் றாளிணை யேத்துந் தகைமறவே
னின்னருள் பாலித் தெனைப்புரப் பாயெழி லிந்திரையே. (௯)

கண்டுங் கனியுங் கரும்பும் நிகர்க்குங் கவிகளுனக்
குண்டிங் கெனவறிந் தேனெனி னும்முள் ளுவகையினாற்
றண்டமி ழிற்சிற் றறிவே னிம்மாலையைச் சாற்றினனென்
னெண்டங்கி நாளு நிலவவைப் பாயெனை யிந்திரையே. (௰)

சாத்துகவி.

புவனகிரி, மகா-ள-ள-ஸ்ரீ **K. R.** புருஷோத்தமநாயுடு
அவர்கள் இயற்றியது.

(நேரிசை வெண்பா)

நற்புலவர் கொண்டு நவிலிந் திரைமாலை
சொற்பொருள் கொண்டிங்குச் செற்றனரற்—பொற்புமிகத்
தாழ்வார் தமையுயர்த்துந் தாமோ தரனடியா
ராழ்வா ரெனுமுயர்ந்தோ ராம்.

கட்டளைக்கலித்துறை.

மதுரைத்தமிழ்ச்சங்கமாணவர் மகா-ா-ா-ஸ்ரீ K. சுப்பராயர்
இயற்றியது.

பூமேவு நாற்குலந் தம்மு ளுயர்குலப் புண்ணியனாய்
நாமா தருள்பெற்றிங் காழ்வா ரெனும்பெயர் நண்ணியவன்
மாமாதின் மீதிந் திரைமாலை யென்று மருவுபெயர்ப்
பாமாலை யொன்று புலவோர் களிக்கப் பகர்ந்தனனே.

ஓர் வேண்டுகோள்.

(1) அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும். (மூதுரை)

இப்பாசுரத்திற்கு "அட்டாலும் பால்சுவையிற் குன்றாது. சங்கு சுட்டாலும் வெண்மை தரும். கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே. அளவளாய் நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லர்" என்றது செம்பொருள். "அட்டாலும் பால்சுவையிற் குன்றாது. சங்குசுட்டாலும் வெண்மை தரும். என்ற இரண்டு வாக்கியங்களும் உபமானம். கெட்டாலும் மேன்மக்கள்மேன்மக்களே என்பது உபமேயம், பொதுத்தன்மை, தத்தம் நிலையினின்றும் நீங்காமை. நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் என்பது தனிவாக்கியம். பாலும் சங்கும் முறையே அடுதலாலாகிய கேட்டையும் சுடுதலாலாகிய கேட்டையும் அடைந்துந் தத்தம் நிலையினின்று நீங்காமையால், வறுமையாகிய கேடுற்றவிடத்தும் தாம் தந்நிலையினின்று மாறாத மேன்மக்களைக்குறித்த "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்கள்" என்றவாக்கியத்திற்கு உபமானங்களாயின. அட்டாலும் கெட்டாலும் சுட்டாலும் என்பனவற்றிலுள்ள வும்மைகள் எதிர்மறை; "நட்டாலும்" என்றதிலுள்ள உம்மை இழிவுசிறப்பு. இதன்றியும் "சுட்டாலும் வெம்மைதரும்" என்று வேறுபாட

மோதி அட்டாலும் பால்சுவையிற் குன்றாது; அதுபோல, கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே. சங்குசுட்டாலும் வெம்மைதரும்; அதுபோல நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர். என்று பதவுரை கூறுகின்றனர். தங்கம் வெள்ளி இரும்பு தாமிர முதலியவைகளைப் பற்பஞ் செய்ய ஸ்புடஞ் செய்கின்றனர். அப்படிச் செய்வதினால் மேற்கூறிய லோகங்கள் தத்தங்காரத்தினின்றும் குறைவுபடுகின்றன. சங்கையவ்விதம் செய்தாலோ வெம்மை அதிகமாகிறதல்லாமல் குறைவுறுகிறதில்லை. அதுபோலக் கெட்டவர்களோடு எவ்வளவு கலந்து சிநேகித்தாலும் அவர்களுடைய தீக்குணம் மிகுதியாகிறதல்லாமல் மாறுகிறதில்லை; ஆதலினாலே "சங்குசுட்டாலும் வெம்மைதரும்," என்பது உபமானம்; நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் என்பது உபமேயம் என்றும்,

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்—கெட்டாலும்
மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு சுட்டாலும்
தான்மிக்க வெண்மை தரும்.

என்றும் பாடமோதிப்பொருளுரைக்கின்றனர்.

(2) கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கு
மவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

இச்செய்யுளிலுள்ள "சவைநடுவே நீட்டோலைவாசியாநின்றான் குறிப்பறிய மாட்டாதவனன் மரம்" என்றவடிக்கு "சவைநடுவே நீட்டோலை கொடுப்பதெவன்? எற்றுக்கு? அது இக்காலத்து நாகரிகத்திற்குப் பொருந்தியிருக்கின்றதா? நன்றாகக் கற்றான் ஒருவன் தனக்கே கொடுக்கப்பெற்ற அவ்வோலையை வாசிப்பதற்கு "இவ்வவை தகுதியல்ல" என்றும் "எனக்குத்தெரியாது" என்றும், மறுமொழிகொடுத்துவிடின், அவனை அறிந்தவனாகப் பாவிப்பதா? அறியாதவனாகப் பாவிப்பதா? என இவைபோன்ற பற்பல அசம்பாவித

மான கேள்விகளைக் கேட்கின்றனர். அஃதன்றியும் நீடு என்பதை விரித்தல் விகாரமாக்கி நீட்டு எனவும் வாசியாநின்றான், குறிப்பறிய மாட்டாதவன், என்பனவற்றை வினையாலணையும் பெயர்களாகவும் அந்வயஞ் செய்துகொண்டு பொருள் கூறுகின்றனர். இம்மட்டோ! இன்னும்வாசியாநின்றவனது குறிப்பையறியமாட்டாதவன் நன்மரம் எனவுங்கொள்ளுகின்றனர்.

(3) முப்பதா மாண்டளவின் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமற் றன்னுட் பெறுனாயின்—செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமா மூப்பு.

என்ற இச்செய்யுளுக்கு உரை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக்கூறுகின்றனர்.

முப்பதாம் ஆண்டு அளவின்–முப்பது வயதினளவிலே, மூன்று அற்று–மலம், மாயை, கன்மம், என்ற முப்பந்தங்களினின்றும் விடுபட்டு, ஒரு–ஒப்பற்ற, பொருளை–முதற்பொருளாகிய பதியை, தப்பாமல்–தவறாமல், தன்னுட்–தன்னுள்ளே, பெறுன் ஆயின்–அடையாவிட்டால், மூப்பு–முதுமைப்பருவத்தில், (அம்முதற்பொருளைத்தன்னுட்பெற்று விடுவானேயெனின்) செப்பும்-சொல்லப்படுகின்ற-கலையளவே–வஸ்திரத்தின் மாத்திரையாகவே இருக்கின்ற, காரிகையார் தங்கள்-அழகையுடைய பெண்களது, முலையளவே-ஸ்தனங்களின் அளவாகவே, ஆகும்–தளர்ச்சியடைவான். மூன்றற்று என்பதற்கு வெகுளி காமம் மயக்கம் என்று கோடலுமாம். இன்னும்;

முப்பதாம் ஆண்டளவின் மூன்றற்று ஒரு பொருளைத் தப்பாமற் றன்னுட் பெறுனாயின், எனக்கூறிச் செப்பும்-அவன் வாயிலிருந்து வருஞ்சொற்களும், கலையளவேயாகும்–கற்றறிந்த நூலினளவேயாகும். (பிறர் மதிக்கும் பொருட்டு நிஷ்டைமுதலியவைகளை யுடையவன் போல் நடித்துக்காட்டுவான்) ஆனால், இவனது உள்ளம், மூப்பு–முதுமைப் பருவத்திலே, காரிகையார் தங்கள்-ஸ்திரீகளது முலையளவேயாகும்-ஸ்தனபாரத்தின் கண்ணேயே யிருக்குமென்று பலவிதமாக வுரைக்கின்றனர்,

நன்றென்றும்...............பொருள் (நல்வழி 38-ம் செய்யுள்)
வினைப்பயனே...............விதி (நல்வழி 37-ஞ் செய்யுள்)

என்ற இவ்விரு வருஞ்செய்யுட்களுக்கும் பொருள் புலப்படவில்லையாகலின், அமிழ்தினுமினிய செந்தமிழ்ப் புலமைவாய்ந்த பண்டித சிரோன்மணிகள் இவற்றிற்குத் தெளிவுறப் பதவுரையோடு கருத்துரையும் கூறி, எமது அறியாமையைப் போக்குவார்களாயின் எம்போன்ற மாணவர் பலர்க்குப் பேருபகாரமாக விருக்கும். அங்ஙனமருள்புரியாவிடின் தெய்வப்புலமை வாய்ந்த நம்மூதாட்டியாராகிய ஔவைப்பிராட்டியாருடையனவும், இன்னுமிவர்போன்றபுலவர்களுடையனவுமாகிய செய்யுட்களினருமையும் பெருமையுங் குன்றி, நந்தமிழ்மொழியும் சீர்குலையும். இவ்வையங்களை நீக்கும்புருஷோத்தமரது நன்றியை என்றும் மறவாதிருக்கும் கடப்பாடுடையேன்.

சுபம்.

ஓர் மாணவன்.

பூர்விக இந்தியாவின் வியாபாரமும் விலையும்.

இப்போது நடக்கும் ஐரோப்பிய மஹாயுத்தத்தினால் உலக ஜனங்கள் குடும்பமுறைகளில் கஷ்டப்பட்டிருப்பதுபோல, வேறு எந்தக்காலத்திலும் இவ்வளவு கஷ்டங்களை அநுபவித்திருந்ததாகச் சரித்திரங்களினால் அறியக்கூடவில்லை. போக்குவரவுஸாதனங்களேற்பட்டு வியாபாரத்தைப் பலபாகங்களிலும் கொண்டு செலுத்தி ஒரு தேசம் மற்றொரு தேசத்தையே சார்ந்திருக்கும்படி ஏற்படுத்திவிட்டதன்மையினால், லோகத்து ஜனங்கட்குக் குடும்ப விவகாரங்களில் கஷ்டமானது, தொற்று வியாதி போலவும் தேஹத்தில் ஒரு அங்கத்தில் பற்றிய வியாதியானது மற்ற அங்கங்களிலும் பரவி தேகமாத்பர்தம் கஷ்டத்தைத் தருவது போலவும் எப்பாகங்களிலும் பரவி வருத்திக்கொண்டிருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

தொழிற்சாலைகளெல்லாம் யுத்த சாமான்களும் சிப்பாய்களுக்கு வேண்டிய ஸாதனங்களையும் செய்துகொடுக்கும்படி திரும்பிவிட்ட தன்மையினால், அச்சாலைகள், உணவுக்கு வேண்டிய ஸாதனங்களைச் செய்துகொடுக்கவும் மற்றுமுள்ள குடும்பசாதனங்களைச் செய்து கொடுக்கவும் இயலாதுபோய்விட்டன. இவ்விதமான காரணங்களே, லாபத்தில்மாத்திரம் நோக்கமும் நிர்த்தயையுங்கொண்ட வியாபாரிகளைத் தூண்டிவிட்டு விலைவாசியையுயர்த்திடச்செய்துவிட்டன. இப்படி விலையுயர்ந்துவிட்ட தன்மையினால், ஏழைகட்கும் மத்திய தரத்தாருக்குமே கஷ்டம் அதிகரித்துவிட்டது; இதனைப் பொறாதவர்களான ஏழைகள் வேறுவழியற்றுக் கொள்ளையடிக்கவும் கிளம்பி விட்டனர். ஆகாரக்குறைவினால் வருந்தி மானத்துடன் வாழ்ந்து வரும் மத்தியதரத்தாருக்குத் தேகக்கட்டுகள்மாறி ரத்தம் அசுத்தமடைந்து ரத்தவோட்டம் கெட்டு வியாதியினால் பீடிக்கப்பட்டு மரணவிகிதங்களும் அதிகப்பட்டுவிட்டன. நமது தேசத்துப் பொருள்களாலேயே நாம் குடும்பத்தைச் செலுத்திவந்த வழக்கத்தையும் கைவிடாது நமதுதேசத்து விளைபொருள்களை அன்னியநாட்டுக்கு ஏற்றுமதிசெய்யாமலும் இருந்தோமானால், நாம் இத்தனை விதங்களான கஷ்டத்தையநுபவித்துச் சோற்றுக்கும் துணிக்கும் கூடத் திண்டாடியிருக்கவேண்டியிராது.

இந்த நிலைமையில், நமது பூர்விகர், இத்தகைய நிலைமைகள் எங்கு ஏற்பட்டுவிடுமோவென்று முற்காப்புடையவர்களாகவே, ஸாதாரணகாலங்களிலுங்கூட வியாபார முறையையும் விலைவிவரத்தையும் எப்படி ஒழுங்குபடுத்தி வைத்திருந்தார்களென்று ஆராயப் புகுவோம்.

அரசருடன் சேர்ந்துகொண்டு யாஞ்ஞவல்க்ய மஹரிஷியானவர் சாமான்களின் விலைகளைத் திட்டப்படுத்திக்கொண்டுவந்தனர். இம்முறையானது ஐந்துநாட்கட் கொருமுறையாகவேனும் பதினைந்து நாட்கட் கொருமுறையாகவேனும் நடந்துகொண்டிருந்தது. இந்த முறையானது பல வியாபாரிகளைக்கூட்டியாலோசனை செய்தபிறகே தீர்மானிக்கப்படும். வியாபாரிகளும் அரசன் இட்ட விலைக்கு வருந்தாதவராகியே விற்று லாபமும் சம்பாதித்துக்கொண்டுவந்தனர்.

ஆனால், அவர்கள் தாமே விலையை யுயர்த்தவாவது தாழ்த்தவாவது சுதந்திரம் உடையவர்களாக இருக்கவில்லை. அரசனாவது வியாபாரிகளாவது ஒரு சாமானுக்குரிய லாபத்தை இவ்வளவென்று சுயேச்சையாக விதித்திடமாட்டார்கள்; ஆனால், அச்சாமானுடைய ஆவசியகம் அனாவசியகம், விருப்பு வெறுப்பு இவற்றையனுசரித்தே லாபத்தையும் விதித்திருந்தார்கள். இதனால் ஏழைகட்கு உண்டியிலும் உடையிலும் பெருங்கஷ்டமேற்படாமலிருந்தது. அன்னியநாட்டு இறக்குமதிச் சரக்குக்குத் தக்க லாபமும் விதிக்கப்பட்டிருந்தது. உள்ளூர்ச் சரக்கானால் நூற்றுக்கு ஐந்துவீதமும், வெளியூர்ச் சரக்கானால் நூற்றுக்குப்பத்துவீதமும் லாபமாக விதிக்கப்பட்டிருந்தது. (யாஞ்ஞ வல்க்யர்—புஸ்தகம் 1-252) இந்த வீதமும், சாமான்கள் செய்யப்பட்டோ அல்லது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டோ இருந்த நாட்களிலிருந்து விற்பனையாகும் நாட்களை ஒருவாறு கணக்கிட்டே விதிக்கப்பட்டுவந்தன. ஒருகால் விலையாகும் நாட்கள் நீட்டிக்கப்படுமாயின், அதற்குத்தக்க லாபமே விதிக்கப்பட்டன (மிதாக்ஷரம் வெளிநாட்டுச் சரக்குகட்கு லாபம் விதிக்கும்போது, வாங்கின விலையையும் வழிச்செலவுகளையும் சேர்த்தே பார்த்து விதிக்கப்பட்டு வந்தன.) (யாஞ்ஞவல்க்யர்—புஸ்தம் 1-253) மேற்சொன்னபடி கணக்கிட்டபிறகுதான் அரசன் மேற்சொன்னபடியான நூற்றுக்கு ஐந்தும் பத்துமான லாப விகிதங்களை ஏற்படுத்திவந்தான்.

ஒரு வியாபாரியானவன் மற்றும் சிலருடன் சேர்ந்துகொண்டு மிகுதியும் லாபத்தைப் பெறவேண்டுமென்ற துராசைகொண்டு அரசன் விதித்த அளவுக்குமேல் லாபம் பெறுவானாயின், உடனே அவன் தண்டிக்கப்படுவான். (யாஞ்ஞவல்க்யர்—புஸ்தகம் 1-259).

பூர்வ ஹிந்துராஜ்யாதிகாரங்களில் சட்டம் இவ்வண்ணமிருந்ததாகக் காண்கிறோம். அதனால் விலைவாசிகளும் ஒழுங்கு படுத்தப்பட்டு, கூலிவேலை செய்து ஜீவிக்கும் ஏழை ஜனங்கட்கு யாதொரு கஷ்டமுந்தோன்ற விடாமல் செய்யப்பட்டது.

பத்திராதிபர்.

சுலக்ஷணை.

(393-ம் பக்கத் தொடர்ச்சி.)

மதிமான், "என்சகோதரிகள் இங்கேவருவதற்காகச் சிலஉடுப்புகளைத் தைக்கும்படி தையற்காரனிடம் சொன்னார்கள். ஆனால் என் தாய் இது விஷயத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை." பிறகு இருவரும் அந்த வீட்டில் உலாவிக்கொண்டிருந்தார்கள். அங்கே கூட்டம் அதிகரித்தது. நூற்றுக்கணக்கான ஜனங்கள் அங்குமிங்கும் திரிந்துகொண்டிருந்தார்கள். சூடாமணி கடிதத்தில் எழுதியிருந்தபடி உடுத்தியிருந்த ஒருஸ்திரீயைக்கண்டான். உடனே மதிமானைப் பார்த்து, "இப்பொழுது நாமிருவரும் ஒருவரையொருவர்விட்டுப் பிரியவேண்டும்," என்றான்.

மதிமான் அந்த ஸ்திரீயைத் திரும்பிப்பார்த்தான். அவள் மிகவும் கம்பீரமாகவும் உயரமாகவும் இருந்தாள். ஓர் அரசன் மனைவியைப்போல் ஆடையாபரணங்களைத் தரித்திருந்தாள். அவளுடைய முகமானது கொஞ்சமும் வெளியே தெரியாமல் மூடப்பட்டிருந்தது. அவளைப் பார்த்ததும் மதிமான் சூடாமணியைவிட்டு விலகினான்.

அந்தஸ்திரீ சூடாமணியைத் தெரிந்துகொண்டு கண்ணைக்காட்டினாள். அவன் உடனே அவளருகில் சென்றான். பிறகு இருவரும் ஜனக்கூட்டத்தை விட்டு ஒரு தனியிடத்திற்குச் சென்றார்கள். அவளுடைய முகம் தெரியாவிட்டாலும், நடையுடை பாவனைகளைக் கண்டு சூடாமணி அவளிடத்தில் இச்சைகொண்டான் தனிமையான இடத்திற்குப் போனதும் சூடாமணி சொல்லுகிறான், "என்னன்பிற்குரிய மாதே நான் உன் முகத்தைப்பார்த்து ஆனந்தமுறச்செய்யவேண்டும்."

ஸ்திரீ, "சூடாமணி, இப்போது நடக்கப் போகும் காரியம் கொஞ்சம் வேடிக்கையாகத்தோன்றும். நீ எனக்காக ஒரு வேலை செய்தாயானால் உன்னிஷ்டப்படி கூலி பெறுவாய்."

சூடாமணி, "நான் என்னிருதயத்தை உன்னிடம் ஒப்புவித்து விடுகிறேன். உன்னிஷ்டப்படி நடக்கத் தயாராயிருக்கிறேன்."

ஸ்திரீ, "நீ சொல்வதை யோசித்துச் சொல். சொல்லிவிட்டுப் பிறகு மாறக்கூடாது."

ஸ்திரீ, "நீ சொல்லுகிறபடி நான் நடப்பேனோ மாட்டேனோ என்று சந்தேகிக்கிறதாயிருந்தால் அது பெரிய காரியமாயிருக்கும் போலிருக்கிறது."

ஸ்திரீ, "இப்பொழுது நான் என் முகமூடியைக் கழற்றமாட்டேன். நான் யாரென்பதையும் அறிவிக்கமாட்டேன். என் பெயர் இன்னதென்று கூட உன்னைத் தெரிந்து கொள்ளவிடமாட்டேன். ஆனால் நான் உயர்ந்த அந்தஸ்துள்ளவள் என்று உனக்குஉறுதியாய்ச் சொல்லுகிறேன். என் முகம் அதிக லக்ஷணமானதென்று நான் சத்தியமாய்ச் சொல்லுகிறேன். நான் ஏராளமான ஐஸ்வரியத்தை உடையவள். இப்படிப்பட்டவளாகிய நான் உன்னைக் காதலிக்கிறேன். நீ எனக்காக ஒரு காரியம் செய்தாற்றான் உன் இச்சையை நிறைவேற்றுவேன்."

சூடாமணி, "உனக்காக என்னகாரியம் வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருக்கிறேன்," என்று அதிகசந்தோஷத்தோடு சொன்னான்.

ஸ்திரீ, "நான் உன்னை அதிக நாளாய்க் காதலித்து வருகிறேன். நீ என் காதலுக்குத் தகுதியானவனா என்று சோதிப்பதற்காக உன்னை ஒருவேலை செய்யச் சொல்லுகிறேன்."

சூடாமணி, "அது என்ன வேலை?"

ஸ்திரீ, "எனக்கு ஒரு பகைவன் இருக்கிறான். அவன் என்னுடைய ஜென்மவிரோதி. அவனைத் தொலைத்து விடவேண்டுமென்பது என்னுடைய கருத்து. அவன் எப்படி எனக்கு விரோதியானான் என்பதும் எதற்காக அவனைத் தொலைக்கவேண்டுமென்பதும் உனக்குத் தெரியவேண்டியதில்லை. எவன் இந்த விரோதியை எமலோகம் அடையச் செய்கிறானோ அவன்றான் என்னுடைய ஆசைநாயகனாவான் என்பது மாத்திரம் உனக்குத் தெரிந்தாற் போதும்."

அவள் விளையாட்டாய்ப் பேசுகிறாள் என்று சூடாமணி நினைத்தான். ஆனால் அவள் அப்படிக்காணப்படவில்லை. ஆகையால் அவன் கொஞ்சநேரம் ஒன்றும் சொல்லாமலிருந்தான்.

ஸ்திரீ, "நான் வேடிக்கையாய்ச் சொல்லுகிறேன் என்றுநினைக்கிறாய் போலும். இல்லை, நான் உண்மையைத்தான் சொல்லுகிறேன். எனக்கு ஒரு விரோதி இருக்கிறானென்பதும், நான் அவனைத்தொலைத்துவிட வேண்டுமென்று எண்ணுவதும் வாஸ்தவம். நீயவனை வலிய வம்புக்கு இழுக்கவேண்டும். உடனே சண்டை நேரிடும். துப்பாக்கிச் சண்டையில் நீ மிகவும் தேர்ச்சியுடையவன் என்பது எனக்குத் தெரியும்."

சூடாமணி, "ஆனால் எனக்கு ஒரு தீங்கும் செய்யாத மனிதனொருவனை நான் அனியாயமாய்ச் சண்டைக்கு இழுப்பதென்றால்—"

ஸ்திரீ, "அப்படியானால் சரி. நீ என் காரியத்திற்குத் தகுந்தவன் என்று நினைத்ததில் மோசம்போனேன். அதனால் பாதகமில்லை. நீ போய் வரலாம். உன்மேல் என் காதலைச் செலுத்தினதற்காக வருத்தப்படுகிறேன்."

சூடாமணி அந்த ஸ்திரீயினிடத்தில் அதிக மயக்கம் கொண்டவனாய்ச் சொல்லுகிறான், "ஒரு நிமிஷம் நில்லு. நாம் இவ்வாறு ஒருவரையொருவர் விட்டுப் பிரியக்கூடாது."

ஸ்திரீ, "என்னுடைய காரியத்தைச் செய்வதென்றால் உனக்குக் கஷ்டம் அதிகந்தான். சண்டை செய்யும்பொழுது உன்னுயிரை ஆபத்துக்கு இடமாக்கிக் கொள்ளவேண்டியதா யிருக்கும். அதனால் கிடைக்கும் பலனையோசித்துப்பார். அதனோடு நீ ஏழை என் செல்வமெல்லாம் உன்னிஷ்டப்படி நீ செலவழிக்கலாம்."

சூடாமணி, "நான் உன்னிஷ்டப்படி செய்கிறேன். உன் விரோதியின் பெயர் என்ன?"

ஸ்திரீ, "இப்பொழுது சொல்லமாட்டேன். நாளை ஒன்பது மணிக்குமேலே கடிதமூலமாய் நீயதை அறிவாய். இவ்விஷயத்தைப் பற்றி நீ ஒருவரிடமும் சொல்லக்கூடாது. நான் இன்னொன்று உனக்குத் தெரிவிப்பதற்குமுன் நீ அதை அறிந்து கொண்டாலும் அந்த இரகசியத்தை உன் மனதிலேயே வைத்துக்கொள்ள வேண்டும். நீ அதை வெளியிட்டால் உடனே எனக்குத் தாக்கல் தெரிந்து

விடும். என் கட்டளையை மீறி யாரிடமாவது நீ இவ்விஷயத்தைச் சொல்வாயாகில், நான் உன்னை என்விரோதியாகப் பாவித்துத் தண்டிக்க வழி தேடுவேன்."

பிறகு சூடாமணி அவளை விட்டுப் பிரிந்து சென்றான். பிரிந்த சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் வீட்டுக்குத் திரும்பினான். அன்றிரவு அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. தான் கண்ட ஸ்திரீயைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தான். மறுநாள் காலை ஒன்பதரை மணிக்கு அவன் எதிர்பார்த்தபடி ஒருகடிதம் வந்தது. அதைப் பிரித்துப் பார்த்தான். அதில் இரண்டு ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. கூட்டின் உட்புரத்தில் ஒருபெயர் மாத்திரம் எழுதப்பட்டிருந்தது. அந்தப் பெயரைப் பார்த்ததும் அவன் ஆச்சரியத்தினால் கூச்சலிட்டான்.

தோட்டம்.

சுலக்ஷணை சிந்தாமணியைப்பற்றி நீலாம்பாள் வீட்டில் பொய்ப் பிரஸ்தாபம் செய்த தினத்திலிருந்து ஒரு வாரமாயிற்று. அம்புஜம் தன்காதலனைப்பற்றி சுலக்ஷணை சொன்ன கதையைக் கேட்டு மிகவும் துக்கித்தாள். இந்த ஒரு வாரமாய் அவள் வீட்டை விட்டு எங்கும் வெளியே செல்லவில்லை. தனக்கு உடம்புக்குச் சரியாயில்லை யென்று அவள் நீலாம்பாளிடம் சொன்னாள். ஆனால் வைத்தியனுடைய உதவி வேண்டும்படியாக வியாதி அவ்வளவு கடுமையாயில்லையென்றும் சொன்னாள்.

சிந்தாமணி வழக்கப்படி நீலாம்பாள் வீட்டிற்குப் போனபொழுது அவனை வேலைக்காரர்கள் உள்ளே விடவில்லை. தனக்கும் அம்புஜத்திற்கும் நடந்ததை நீலாம்பாள் அறிந்துகொண்டாளென்று அவன் முதலில் நினைத்தான். ஆனால் மறுநாள் சுலக்ஷணை தன் பெயரைக் கெடுப்பதற்காக ஏதோபொய்ப்பிரஸ்தாபம்செய்திருக்கிறாள் என்ற சமாசாரம் அவனுக்குத் தெரிய வந்தது. சுலக்ஷணை தன்னைப் பற்றிச் சொன்னதெல்லாம் பொய்யென்றும் தன்னை நேரில்பார்த்தால்

நலமாயிருக்கும் என்றும் சிந்தாமணி நீலாம்பாளுக்கு ஒரு கடிதம் எழுதினான். கடிதத்திற்குப் பதிற் கிடைக்கவில்லை. அவன் இரண்டு மூன்று தினங்கள் சென்று மற்றொருதரம் நீலாம்பாள் வீட்டிற்குப் போனான். அப்பொழுதும் அவன் வீட்டிற்குள் விடப்படவில்லை. அம்புஜத்தை எப்படியாவது பார்த்துத் தான்குற்றமற்றவன் என் பதை அவளுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நினைத்தான். ஆகை யால் அவள் வெளியே வரும்பொழுதாவது அவளைப்பார்க்கவேண்டு மென்று எண்ணி அவளுடைய வீட்டிற்கருகாமையில் திரிந்துகொண் டிருந்தான். நாலைந்துநாட்கள் வரை அவன் அம்புஜத்தைக் காண முடியவில்லை.

ஒருநாள் அம்புஜம் வீட்டின் மேல்மாடியிலுள்ள அறையொன் றில் உட்கார்ந்திருந்தாள், அவ்வறையின் ஜன்னல் வழியாய்ப் பார்த் தால் வீட்டின் பின்னாலிருந்த தோட்டமும் அதற்குப் பின்புறமிருந்த வீதியும் நன்றாய்த் தெரியும். தோட்டத்திற்குப் பின்னால் திரிந்து கொண்டிருந்த சிந்தாமணி ஜன்னல் வழியாய் அம்புஜத்தைப் பார்த்து விட்டான். உடனே கொஞ்சங்கூட யோஜனை செய்யாமலும், தான் செய்கிற காரியம் இப்படிப் பட்டதென்று எண்ணிப்பாராமலும், அவன் வெகுபரபரப்புடன் சுவற்றில் ஏறித்தோட்டத்திற்குள் குதித் தான். சிந்தாமணியைப் பார்க்காத அம்புஜம் ஏதோ ஒருகாரியமாய்க் கீழே இறங்கிப்போய்விட்டாள். சிந்தாமணி உள்ளே குதித்ததும் சூடாமணி நிற்பதைக் கண்டான். சற்று நேரம் இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டே நின்றார்கள்.

"நீ ஏன் இந்தத் தோட்டத்திற்குள் ஏறிக்குதித்தாய்?" என்று சூடாமணி சற்று கடுமையாய்ச் சொன்னான்.

சிந்தாமணி, "நான் உன்னுடைய அத்தையினிடத்தில் சிலவிஷ யங்களைப்பற்றிப் பேசவேண்டியிருந்தது———"

சூடாமணி, "உன்னை வீட்டிற்குள் நுழையவிடவேண்டா மென்று உத்தாவிட்டும் உன் கடிதங்களுக்குப் பதிலெழுதாமலிருக்க நீ தோட்டத்திற்குள் ஏறிக் குதித்த காரணமென்ன?"

சிந்தாமணி, "நான் இவ்விதமாக எறிக்குதித்தது என்மேற் பிசகுதான். ஆனால் காரணமில்லாமல் நான் இக்காரியத்தைச் செய்ய வில்லை. என்னைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் கதை முழுப்பொய் என்பதை உன்னுடைய அத்தையிடம் சொல்வதற்காக வந்தேன்."

"பிசகா! வீட்டுச்சுவற்றில் எறிக்குதித்தது திருட்டுத்தனம். இப்பொழுது வேலைக்காரர்கள் இங்கே யிருந்தால் உன்னைப்பிடரியைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்லியிருப்பேன். இனிமேலாவது மன்னிப்புக் கேட்டுக்கொள்," என்று சூடாமணி மிகவும் கோபத்துடன் சொன்னான்.

இதைக்கேட்டதும் சிந்தாமணிக்கும் கோபம் உண்டாயிற்று. "நீ இப்படிப் பேசியபிறகு நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்க மாட்டேன்," என்று அவன் சொன்னான்.

சூடாமணி, "இதுவா உன்னுடைய தீர்மானம்? அப்படியானால் நீ என்னுடன் சண்டை செய்ய வேண்டும். அதற்காக நீ உன் சினேகிதனொருவனைக் குறிப்பிட்டுச் சொல்."

சிந்தாமணிக்குத் தன்னுடைய காதலியின் சகோதரனுடன் சண்டை செய்ய மனமில்லை. ஆயினும் சண்டை செய்யமாட்டேன் என்றால் சூடாமணி தன்னைப் பயங்காளி என்றுசொல்லுவான். ஆகையால் அவன் சற்றுநேரம் 'இருதலைக் கொள்ளி எறும்பு போல்' தயங்கினான். பிறகு சூடாமணியைப் பார்த்துச் சொல்லுகிறான், "நல்லது, நான் உன்னுடன் சண்டை செய்கிறேன். என்னுடைய சினேகிதன் மேற்குவீதியிலிருக்கும் துரைச்சாமி என்பவன்."

சூடாமணி, 'துரைச்சாமியிடம் என்சினேகிதனையனுப்பிசண்டை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லுகிறேன்."

சிந்தாமணி தோட்டத்தை விட்டு வெளியே வந்து துரைச்சாமி வீட்டுக்குப்போனான். துரைச்சாமி வீட்டிலில்லாதபடியால் அவனுக்கு ஒரு கடிதம் எழுதிவைத்துவிட்டுத் தன்வீடுசென்றான். தன்னறையில் உட்கார்ந்துகொண்டு பல கடிதங்களை எழுதினான். அவற்

றில் கங்கதாதரனுக்கு ஒரு கடிதமும் அம்புஜத்திற்கு ஒருகடிதமும் இருந்தன. கடிதங்களெல்லாம் எழுதிமுடிய இரண்டுமணி நேரமா யிற்று. ஒவ்வொரு கடிதத்தையும் தனித்தனியே கூட்டில வைத்து மேல்விலாசம் எழுதி அரக்குமுத்திரையிட்டான். எல்லாக்கடிதங் களையும் ஒன்ருய்ச் சேர்த்து ஒரு கட்டாய்க்கட்டித் தன்பெட்டியில் வைத்துப் பூட்டித் திறவுகோலை எடுத்து மடியில் வைத்துக்கொண் டான்.

துரைச்சாமி சிந்தாமணியின் வீட்டிற்கு வந்தான். இருவரும் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். சண்டை செய்வதற்குக் காரணம் என்னவென்று துரைச்சாமி சிந்தாமணியைக் கேட்டான். சிந்தாமணி அம்புஜத்தைப்பற்றி மாத்திரம் சொல்லாமல் மற்றைய விஷயங்களைப்பற்றிச் சொன்னன்.

துரைச்சாமி, " துப்பாக்கியை உபயோகிப்பதில் சூடாமணி மிக வும் கெட்டிக்காரனென்று உனக்குத் தெரியுமல்லவா? "

சிந்தாமணி, " ஆம். மேலும் துப்பாக்கியினுற் சுடுவதில் என க்கு அவ்வளவு பழக்கமில்லை. சண்டையில் சூடாமணியைக் கொல்ல வேண்டுமென்பது என்னுடைய உத்தேசமல்ல, "

துரைச்சாமி, " நீ அவனைக்கொல்ல யத்தனிக்காமலிருந்தால் உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கவேண்டும். சண்டை செய்யும் பொழுது உன்னுடைய உயிர் ஆபத்துக்குள்ளாகிறதென்பதை நினைத் துப்பார். "

சிந்தாமணி, " அது இருக்கட்டும், சண்டை எப்பொழுதுநடக்க வேண்டும்? எந்த இடத்தில் நடக்கும்? "

துரைச்சாமி, " நாளைக்காலை ஆறரை மணிக்குச் சூடாமணி வீட் டுக்கு ஒருமைல் தூரத்திற்கப்பால் இருக்கிற பொட்டலில் சண்டை நடப்பதென்று ஏற்பாடாகி யிருக்கிறது. உன்னிடம் கைத்துப்பாக்கி இருக்கிறதா. இல்லையென்ருல் குற்றமில்லை, என் துப்பாக்கியை நீ உபயோகித்துக்கொள்ளலாம். "

சிந்தாமணி, "நாளைக்காலை இந்துமணிக்கு நான் உன் வீட்டிற்கு வருகிறேன். பிறகு இருவருமாகச் சண்டை நடக்கவேண்டிய இடத்திற்கு ஆறரை மணிக்குப்போவோம்."

சண்டை.

துரைச்சாமியும் சிந்தாமணியும் பேசிக்கொண்டிருந்த அதே சமயத்தில் சூடாமணியின் வீட்டில் என்னநடந்ததென்று கவனிப்போம். அவன் தனியாய் ஒரு அறையில் உட்கார்ந்துகொண்டிருந்தான். சற்று முன் தான் அவனுடைய சிநேகிதனான காரியப்பன் என்பவன் அவனிடம் வந்து துரைச்சாமியுடன் சண்டையைப்பற்றித் தான்செய்த ஏற்பாடுகளைத் தெரிவித்துவிட்டுச் சென்றான். சூடாமணி ஆழ்ந்த யோசனையிலிருப்பவனைப்போற் காணப்பட்டான். சண்டையில் தன் உயிருக்குச்சேதம் வருமென்று அவன் பயப்படவில்லை.

சிந்தாமணியைச் சண்டைக்கு இழுத்ததுதன்மேற்குற்றம் என்று அவன் எண்ணினான். ஆனால் நடந்த காரியத்தைப்பற்றி வருத்தப்படுவதில் பிரயோசனமில்லையென்று நினைத்தான். சண்டைசெய்வதனாற் குற்றமில்லை என்று ஒரு எண்ணம் அவன் மனதில் உண்டாயிற்று. இவ்வாறு அவன் மனமானது குழம்பிக்கொண்டே இருந்தது.

இச்சமயத்தில் மதிமான் அங்குவந்து அறைக்குள் நுழைந்தான்.

மதிமான், "இன்று நீ என்னுடன் சாப்பிடவருகிறேனென்று சொல்லி ஏமாற்றி விட்டாயே!"

சூடாமணி, "கொஞ்சம் முக்கியமான அலுவலாய் இருந்துவிட்டபடியால் நீ என்னை மன்னிக்கவேண்டும். இப்பொழுது வேண்டுமானால் நாம் கொஞ்சநேரத்திற்கு வெளியே போய்த் திரிந்துவிட்டு வரலாம்."

"நீ ஏன் ஒருமாதிரியாய் இருக்கிறாய்? ஏதாவது நடந்ததா? ஒரு வேளை உனக்குக் கடன் கொடுத்திருப்பவர்கள் வந்துதொந்திரவு செய்தார்களோ?" என்று மதிமான் சூடாமணியைக் கவனித்துப் பார்த்துவிட்டுச் சொன்னான்.

(தொடரும்.)

வ. வி. நடேசன்செட்டி,

ஆத்தங்குடி.

ஸ்ரீ:

புதுக்கோட்டை ராஜ்யம்.

(554-ம் பக்கத்தொடர்ச்சி)

நியாயஸ்தலம்.

மாகாணத்தின் நியாயஸ்தலங்கள் ஒழுங்குபடுத்தப் பெற்றுத் தற்காலஸ்திதிக்கு 1887-ம் வருஷத்திலே கொண்டுவரப்பட்டன. மாகாணத்தின் முக்ய நியாயஸ்தலம் ஒரு ஹைகோர்ட்டின் சக்தியளவுக்கு வேலைசெய்து வருகின்றது. 1910-ம் வருஷத்தில் முக்ய நியாஸ்தலத்திலிருந்து வரும் மறு விசாரணைகளை விசாரிப்பதற்கென்று ஒரு விசேஷமான நியாயஸ்தலமொன்று ஏற்படுத்தப்பெற்று நடந்து வருகின்றது. 1904-ம் வருஷத்தில், மத்தியஸ்தர்களுடைய உதவியின் பேரில் செஷன்ஸ் கேஸ்களையும் விசாரிக்கும் முறையும் ஏற்படுத்தலாயிற்று. ஊசொழுங்குக் குரியதும் குற்றத்துக்குரியதுமான நியாயங்களும் பிரிட்டிஷ் இந்தியாமாதிரியாகவே தீர்மானிக்கப்படுகின்றன. பெரும்படியான கொலைக்குற்றங்களில் அதிகமான தண்டனை யென்பது தூக்குத் தண்டனையன்று; ஏனெனில், இந்த மாகாணத்து வழக்கம் அதற்கு மாறாக இருக்கின்றபடியால், இதற்குப்பதிலாகத் தேசப்ரஷ்டமே கடுந்தண்டனையாகச் செய்யப்பெற்று வரப்படுகின்றது.

குற்றவாளிக் கூட்டத்தாரில் சிலரை ஒழுங்குபடுத்திக் குடித்தனப் பான்மைக்குக் கொண்டுவந்து தொழின் முறைகளில் ஊக்கிவிட்டிருக்கிறபடியால், மாகாணத்து ஜனங்கள் களவினால் நேரும் வருத்தங்களைப் பெரும்பாலும் அநுபவியாதவர்களாகவே தங்கள் சொத்து சுதந்தரத்துடன் நன்றாகவாழ்ந்து வருகின்றார்கள்.

வைத்தியமுறை,

1886-ம் வருஷத்தில் மாகாணத்துக்கே பொதுவாக ஒரே ஒரு வைத்யசாலை தான் இருந்தது. ஒரு வைத்தியர் தமக்கு உதவியாக ஒன்று இரண்டு உதவியுத்தியோகஸ்தர்களுடன் வைத்தியசாலையைக் கவனித்து வந்தனர். வைத்திய சாலையிலேயே கிடக்கையுடன்

இருந்து வைத்யம் செய்துகொண்ட நோயாளிகளின் தொகை 151 ஆகவும், வந்து வைத்தியம் செய்துகொண்டுபோன நோயாளிகளின் தொகை 14,288 ஆகவும் இருந்தன. தற்காலம் ஒரு பெரிய வைத்தியசாலையும் பெண்கட்கும் சிறுவர்க்குமென்று ஒரு சிறிய வைத்ய சாலையும் நகரத்தினுள் நடந்தேறிவருகின்றன; நாடுகளில் ஒன்பது சிறிய வைத்தியசாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன; ஒரு பெரிய டாக்டரும் ஒரு பெண்வைத்தியரும் பதினைந்து உதவிவைத்தியர்களும் நியமிக்கப்பெற்று வேலை பார்த்து வருகின்றார்கள். வைத்தியசாலையிலேயே கிடக்கையுடனிருந்து மருந்து சாப்பிடும் வியாதியஸ்தர்கள் வருஷமொன்றுக்கு 700 ஆகவும், வந்து மருந்து வாங்கிச் செல்லும் வியாதியஸ்தர்கள் வருஷமொன்றுக்கு ஒன்றேகால் லக்ஷமாகவும் தொகை கணக்கிடப்பட்டிருக்கின்றது. பொதுவாகச் சொல்லப்புகுந்தால், மாகாணத்தில் ஒரு கிராமத்திலாவது, திடீரென்று ஏற்படும் வியாதிக்கும் தற்கால முறையான வைத்தியம்கிடைக்கப்பெறாமல் வருந்துகிறதில்லை யென்றே சொல்லலாம்.

அம்மை வைக்கும் பால் எடுப்பதற்காக ஒருபண்டகசாலையும் ஏற்படுத்தப்பெற்று, மாகாணத்திலுள்ள எல்லாப்பாகங்களிலும் யாவரும் அம்மை வைத்துக்கொள்ளவேண்டியது கட்டாயம் என்ற ஏற்பாடும் செய்யப்பெற்றிருக்கின்றது.

நகரத்திலிருக்கும் பெரியவைத்யசாலையானது தகுந்த தேர்ச்சியடைந்த உதவியுத்தியோகஸ்தர்களுடன் கூடிய ஒரு பெரிய டாக்டரால் நிர்வஹிக்கப்பட்டுவருகின்றது. அதற்குரிய கட்டடமும் ஒழுங்கான முறையுடனும் சுகவஸதிகளுடனும் கட்டப்பெற்றுத் தற்கால நாகரிகத்துக்கு ஏற்ற வைத்தியக்கருவிகளுடனும் அமைக்கப்பட்டிருக்கின்றது. ரணசிகித்ஸை செய்யும் இடமானது நவீனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட வைத்தியக்கருவிகளுடன் நிறுவப்பெற்று வந்து பார்ப்பவர்கட்கு ஆச்சரியம் தோன்றும்படியான ஒழுங்குடனும் சுத்தத்துடனும் நடத்தப்பட்டுவருகின்றது.

பத்திராதிபர்.

சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரம் என்பது சிறிது ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளின் முன் நமது தமிழ் நாட்டில் நடந்த ஒரு உண்மைச் சரிதமாகும்.

சோழ வளநாட்டின் தலை நகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குடியில் கோவலன் என்னும் செல்வன் கண்ணகி என்னும் செல்வியை மணந்து இல்லறம் நடத்தி வந்தான். சில ஆண்டுகளின் பின் அந்நகரத்தேயுள்ள மாதவி என்னும் பரத்தையின் நேயங்கொண்டு, தன் அருமைக் காதலியைப்பிரிந்து அம்மாதவியகத்தேயே தங்கிவிட்டான். கண்ணகி வருந்தி வெளிக்காட்டாது தேறியிருந்தாள். ஒரு சமயம் கோவலன் மாதவியின்பால் உண்மையுணராது ஐயுற, அதுபற்றி மாதவி பிணங்கினள். அதனைப் பொறாத கோவலன் தன்னில்லம் சேரவெண்ணி மாதவியைக் கைவிட்டு வர, அவள் ஆற்றாது புலம்பியிருந்தனள்.

இப்பால் இல்லம் வந்தடைந்த கோவலன் தன் செல்வமே யன்றித் தன் அருமைக்காதலி யணிகளும் பிறவும் மாதவி பொருட்டழிந்து ஒழிந்ததை எண்ணி வருந்தி நாணிநிற்க, அதுகண்ட கண்ணகி ஆற்றித்தேற்றினள். இன்னும் அக்கால வழக்கின்படி மணந்தபின் அணியாமையால் தன்பால் சிலம்பு என்னும் அணி எஞ்சியுள்ளதை அறிவித்துப் பெற்றுக்கொள்ளவும் வேண்டினள். கோவலன் மனச்சோர்வொழித்து, அவ்வணியைக் கொண்டு வேற்று நகரடைந்து அதன்விலைப்பொருளால் வணிகம் செய்ய எண்ணியதைக் கண்ணகிக்குத்தெரிவித்தான்; கண்ணகி இசைய, இருவரும் மதுரைமாநகர்க்கு வழிக்கொள்ள எண்ணி இடையே கவுந்தி என்னும் தவமுதியாளைத் துணைக்கொண்டு சென்றடைந்து ஆங்குப் புறச்சேரியில் ஆயர்மனையில் தங்கினர். கோவலன் சிலம்பினை விற்க அந்நகர்க்குட் செல்ல

அங்கே ஒரு பொற்கொல்லன் (தட்டான்) சூழ்ச்சியால் திருடனாக எண்ணப்பட்டு அரசனேவலாற் கொலையுண்டிறந்தான். அது கேட்ட கண்ணகி பலவாறு புலம்பி ஒருவாறு தணிந்து அரசன் பாற்சென்று, வாதிட்டு, வென்று, அவன் இறந்தபின் அந்நகரினை எரிகொள்ளச் செய்து, மேற்றிசை யடைந்து சேரன் தலைநகரை யடுத்த ஒரு குன்றின்மீது தானும் இறந்து சிறந்தனள். பின்னர்ச் சேர அரசனும் மற்றை அரசர்களாலும் பத்தினிக் கடவுளாகக் கொண்டாடப் பட்டாள் என்பது சரிதத்தே முடிந்தபொருளாகும். இவ்வுண்மைச் சரிதம் அவ்வப்போது நடந்த மற்றைச் செய்திகளொடு விரித்துரைக்கப்படும்.

இங்ஙனம் உண்மைச் சரிதங்களேயோ, இயற்கையோடொன்றுங் கட்டுச் சரிதங்களேயோ எதுவாகக்கொண்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டிய வழக்க ஒழுக்கங்களைப் போற்றியும், வேண்டாத வழக்க ஒழுக்கங்களை மாற்றியும் நூலியற்றி, மக்களின் மனதிற் பதியவைப்பது அறிவுமிக்க நூலாசிரியர் கொள்கையாகும். இத்தகைய நூல்களின் இன்றியமையாமையினை எல்லாத் தேயத்தாரினும் முன்னரே தமிழ் நாட்டினர் அறிந்துளார் என்பதற்கு மிகப் பழைய இச்சிலப்பதிகாரமே சிறந்த சான்றாகும்.

ஒரு நூல் எவ்வளவு உயர்ந்த ஒழுக்கங்களைக் கற்பிக்கும் நோக்கத்தோடு தோன்றினும் மக்கள் மனவிருப்புச் செல்லும்நடையிற் காணப்பட்டாலன்றிப் பயனின்றிக் கழியுமென்பது அந்நூலாசிரியர் நுண்ணிதில் உணரவேண்டியது. ஆகவே, நமது சிலப்பதிகாரம், தாய்மொழிப் புலமை தலைசிறந்து விளங்கிய பண்டைக் காலத்தே எழுதப்பட்டதாகலின், தமிழ் இலக்கண இலக்கியங்கள் ஆராய்ந்த புலவர்கள் கண்டு மகிழும் உயர்ந்த செந்தமிழ் யாப்பு நடையில் ஆழ்ந்த பொருளமைதி சிறக்க இயற்றப்பட்டுள்ளது; எனினும் இக்காலத்துத் தமிழ்ப்பயிற்சியில் மிகத்தாழ்ந்தவர்களும் இந்நூலின் பேரழகினிடத்தே ஈடுபட்டுப் பயிலவும், ஆங்காங்குள்ள அருமை பெருமைகளைக் கண்டு வியக்கவும், அப்பெருமைகளைத் தம்

ஆற்றலையும் எண்ணாது வெளியிடத் துணியவும் ஏற்ற அத்துணைத் தெளிவுடையது இந்நூல் என்பதற்குச் சாக்ஷிகூற யானே அமைவேன்.

ஒரே சரிதத்தில் எல்லாச் சீர்திருத்தங்களையும் இணைத்துக் காட்டுவது இயலாத காரியம். அங்ஙனமே இச்சிலப்பதிகாரத்தில் இயன்றபடியே சில சீர் திருத்தங்கள் இணைத்துக் காட்டப்பட்டன. அக்காலத்தே அரசர்கள் எத்துணையோ புலவர்களைப் போற்றி அன்னோரால் நீதிநூ லியற்றுவித்து, அந்நூல்களை ஆய்ந்து, அறஞ் செலுத்தி வந்தனராயினும், அறம் பொருள் இன்பம் பற்றிய வினைகளைத் தனித்தனி ஏற்குமாறு நாளோலக்கப் பாகுபாடுகள் வைத்திருந்தனராயினும், சிற்சில காலங்களில் அப்பாகுபாட்டினை மதியாது அம்மூப் பொருள்களையுங்கலந்து புரிந்து வருவாராயினர். அதனால் அவ்வரசர்கள் ஓரோவழித் தம் அரசியல் பிழைக்கவும், வளையாச் செங்கோல் வளையவும் மேனோக்காகச் செலுத்திய கருமங்களைக் கண்டித்து, அன்னோர்களை அரசியல் நெறியில் ஆழ்ந்த ஆராய்ச்சியினராக்கத் தூண்டுவதற்கு இச்சரிதம் ஏற்றதாக முடிந்தது.

இன்னும், அக்காலத்தே பரத்தையர் என்ற ஒரு வகுப்பினரும், மனைவியரோடொழுகும் மாண்புற்றிருந்தும் அப்பரத்தையர் கூட்டுறவை விரும்பும் ஆடவர் சிலரும் இருந்து வந்தனர். இங்ஙனமிருந்த இவ்விரு திறத்தார் அறியாமைகளைக் கற்புடையாராகிக் கணவன் வழிநிற்கும் அருமைப் பெண்களின் உயர்வினை அறிவித்து ஒழிக்கவேண்டியதாயிற்று. எவ்வாறெனில், கற்புடையாரையே உயர்ந்த நூலாசிரியருஞ் சிறப்பிப்பதறிந்த அப்பரத்தையர்கள் தமது இழிந்த வொழுக்கத்தால் எல்லாராலும் பழிக்கப்படுதலினும் தம் வழியினராவது கற்புடைய குலமக்களாகிச் சிறப்புறுவதற்கு விழைந்து தம் ஒழுக்கத்தினை அறவே வெறுத்து விடுவார்கள். இங்ஙனமே தம் அருமைக்காதலியைக் கைவிட்ட ஆடவர்களும் அக்காதலிகளின் சிறப்பினையறியுமிடத்து அன்னோரைப் பொன்னே போற்போற்றிக் கைவிடார். ஆகவே இங்ஙனம் கற்புடை மகளிரின் உயர்வினைக் கூறுமுகத்தால் பரத்தையர்களையும் அவர் பால் விழைவுறும் ஆடவர்களையும் தடுத்து நன்னெறி யுய்ப்பதற்கும் இச்சரிதம் ஏற்றதாகவிருந்தது.

இன்னும், அரசருங் குடிகளும் தத்தம் கருமங்களை நடத்துகின்ற வழி, அவை தடை யெய்து மிடத்தும் அவைகளால் எத்தகைய இடையூறுகளைத் தாம் எய்துமிடத்தும், ஊழ்வினையின் பயனென் றறிந்து மனச்சோர்வுறாது விடாமுயற்சி யுடையோ ராவதற்கு, ஊழ்வினைப்பயன் எத்தகையோரையும் எய்தாதொழியாது என்பதனைத் தெளியவுணர்த்துவதற்கும் இச்சரிதம் ஏற்ற தொன்றாக விருந்தது.

இந்நூல் மேற்கூறிய மூன்று உள்ளுறைகளையும் இணைத்துக் காட்டும் நோக்கம் பெரிது முடையது என்பதை:—

“ அரசியல் பிழைப்பின் அறங்கூற்றாவதூஉம்,
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்,
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மேன்பதூஉம்...நாட்டுதும் ”

என்ற பதிகத்து அடிகளால் அறியலாம்.

மேற்கூறிய மூன்று உள்ளுறைகளையும் அடிப்படையாகக்கொண்டுவிளங்கும் இந்நூல் எத்துணையோ கிளைநீதிகளாகிய மேற்கட்டுகளையும், எல்லா நீதிகளையும் தொகுத்து முடிப்பதாகிய முடியினையுங் கொண்டுவிளங்கு மியல்பினது.

மேற்கூறியபடி நடையாலும் உள்ளுறையாலும் சிறந்த இந்நூற்பரப்பில் எளியேன் சென்ற சிறிது தூரத்திற் காணப்பட்ட சில அருமை பெருமைகளை ஏற்றபடி வரையப் புகுவேன்.

R. வேங்கடாசலம்பிள்ளை.

பலகுறிப்பு.

ஒருபத்திராதிபர்

அமெரிக்காவில் மிஸ்டர் ப்ரிஸ்பேன் என்று பெயரையுடைய பத்திராதிபர் இருக்கின்றார். அவர் சொந்தமாக நடத்திவரும் பத்திரிகைக்குச் சந்தாதார்கள் இருபதுலக்ஷம் பெயர்களிருக்கின்றார்களாம். அந்தப்பத்திராதிபர் பிரஸிடெண்ட்வில்ஸனைக் காட்டிலும் அதிகச்சம்பளம் பெற்று வருகின்றாராம்.

ஒரு நூலாசிரியர்.

இங்கிலாந்தில், ஆர்னால்டுபென்ட் என்று பெயருடைய ஒரு நூலாசிரியர் இருக்கின்றார். அவர் மணிக்கு 30 பவுன் சம்பாதிக்கின்றார். அநேக நாவல்கள் அடிக்கடி எழுதிக்கொண்டு வருகிறார். புதிது புதிதாக எழுதுவதில் பெயர் போனவர். ஆயிரம் வார்த்தைகளடங்கிய வியாஸமொன்றுக்கு அவர் 100 கினி அல்லது 105 பவுன் பெற்றுவருகின்றார். இவர் தாம் முதலில் கைக்கொண்ட வக்கில் தொழிலைக்கைவிட்டு இத்தொழிலை மேற்கொண்டிருக்கின்றாராம்.

சு. மி.

ஒரு முனிஸிபல் ஆயுர்வேத—யூனானி வைத்தியசாலை.

சென்னை மஹா ஜனஸபையின் ஹெல்த் கமிட்டியார் சென்னை மாகாணத்திலுள்ள முனிஸிபாலிடிகட்கும் தாலூகா டிஸ்ட்ரிக்ட் போர்டுகட்கும் ஒரு சுற்றுக்கடிதம் அனுப்பிச் சுதேச வைத்திய முறைப்படி வைத்திய பாடசாலைகளும் வைத்தியசாலைகளும் ஸ்தாபிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதன் பலனாக ஒவ்வோரிடமிருந்து ஒவ்வொரு விதமான பதில் கிடைக்க, ஈரோட் முனிஸிபாலிடியார் அடியில் குறிக்கப்படும் கடிதத்தை முற்கூறிய ஹெல்த் கமிட்டியின் கார்யதர்சிக்கு அனுப்பி யிருக்கின்றார்கள்:—

"ஐயா! தாங்கள் 12-12-1917-ம் வருஷத்தில் அனுப்பிய சுற்றுக்கடிதத்தின் ஸம்பந்தமாய் நான் தங்களுக்கு அடியில் வரும் விஷயத்தை அறிவிக்க விரும்புகிறேன். ஈரோட் முனிஸிபல் கௌன்ஸிலானது தற்கால நாகரிக வழியில் புராதன ஆயுர்வேத யூனானி சாஸ்திரங்களை மாணாக்கர்களுக்குக் கற்பிப்பதற்கு ஏற்ற ஒரு கலாசாலையை ஸ்தாபிக்க விரும்புகின்றது. அக்காரியத்தை நிறைவேற்றுவதற்கு விவரமான ஸ்கீமொன்று தயார்செய்து தயவு செய்து எனக்கு சீக்கிரத்தில் அனுப்பக்கோருகிறேன்.

இப்படிக்குத் தங்கள் ஊழியன்
(ஒப்பம்) இ. வி. இராமஸ்வாமி நாயகர்,
முனிஸிபல் சேர்மன்

தன்வந்திரி பூஜை.

ஆச்வின கிருஷ்ண த்ரயோதசியில் எல்லா இந்திய ஆயுர்வேத மஹாமண்டலம் பூர்வாங்கமாக ஒரு ஸபைகூடியதில், ஆச்வயுஜ கிருஷ்ணபக்ஷத் திரயோதசி யன்றைக்குத் தன்வந்திரிதினம், கொண்டாடப்படவேண்டுமென்றும், அதையனுசரித்து இயன்ற அளவு திரவியம்சேகரிக்கவேண்டு மென்றும் வைத்யரத்னம் பண்டித கோபாலாசார்லு அவர்களால் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானம் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது. அத்தீர்மானம் இந்தியாவி லுள்ள எல்லா முக்கியபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு அனை வரும் அறியுமாறு விஷயத்தைப் பிரசுரம் செய்யவேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதற்காக இச்சென்னையை இருபது பாகங் களாகப் பிரித்து, ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வோர் அதிபதியும் அவருடைய கீழே சில சுதேச சேவகர்களையும் ஏற்படுத்திவிட யோசிக்கப்பட்டது. வெளியூர்களில் வசூலாகும் திரவியத்தை "ஆயுர்வேத மஹாமண்டல "ஜான்ஜி" அவர்கள், ஆயுர்வேத கலாசாலை மௌண்ட் ரோட், மதராஸ் என்கிற விலாஸத்துக்கு அனுப்பவேண்டும் என்று மஹாமண்டல கார்யதர்சி கேட்டுக்கொள் கிறார்.

குழந்தைகளுக்கு ஏற்றபால்.

முலைப்பால் ஊட்டிவளக்கப்படும் குழந்தைகளில் ஒருவயதுக் குட்பட்டவைகளாய் நூற்றுக்கு ஏழுகுழந்தைகளே இறந்துவிடுகின் றன. பலவிதமான புட்டிப்பால்களையும் செயற்கையுணவுகளை யும் ஊட்டி வளர்க்கப்படும் குழந்தைகளில் ஒருவயதுக்குட்பட்டவை களாய் நூற்றுக்கு முப்பது விதத்திற்கு மேலாகவே இறந்துவிடுகின் றன. புட்டிப்பால்களால் எவ்வளவு கெடுதி நேரிடுகின்றது என்பது இதனால் விளங்கும்.

வைத்தியகலாநிதி.